விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 18 வியாழக்கிழமை (02.01.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 014

# தமிழீழம் அமைவது சாத்தியமில்லை

## அரசியல் விமர்சகர் என்.ராம் தெரிவிப்பு



(சென்னை)

**அடிப்படையிலேயே இனவாதக் கொள்கையைக் கொண்டிருக்கும் தனித் தமிழீழக் கோரிக்கையானது இலங்கையில் எப்போதும் சாத்தியமே இல்லாதது என இந்தியாவின் முக்கிய அரசியல் விமர்சகர் என்.ராம் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவின் முக்கியமான, மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவர், அரசியல் விமர்சகர், பத்தியாளர், 'த இந்து' குழுமத்தின் தலைவர் எல்லாவற்றுக்கும் மேல் கடந்த 45 ஆண்டு கால ஆட்சியாளர்களையும் அதிகாரவர்க்கத்தையும் அருகில் இருந்து பார்த்தவரான என்.ராமுடன் அவருடைய பத்திரிகைத் துறை வருகையில் தொடங்கி ஈழத் தமிழா பிரச்சினை பற்றி இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இருந்து ஒருபகுதி...

**கேள்வி :** உங்கள் மீதான விமர்சனங்களுக்கு வருவோம். தமிழ் மக்கள் பிரச்சினைகளில் நீங்களும் சரி 'த இந்து' வும் சரி, தமிழ் விரோத அணுகுமுறையோடே செயல்படுகிறீர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?

**பதில் :** இந்தக் கேள்விக்குக் கொஞ்சம் விரிவாகப் பதில் அளிக்க விரும்புகிறேன். ஓர் உண்மை தெரியுமா? இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி இந்திய அளவில் வேறு எந்தப் பத்திரிகையைவிடவும் அதிகமாக எழுதியிருப்பது 'த இந்து'தான். அதிலும் 1983 இனப்படுகொலைக்குபபின், தமிழ் ஆயுதக் குழுக்களின செயல்பாடுகளையும் தமிழர் போராட்டங்களையும்பற்றி விரிவான செய்திகளையும் கட்டுரைகளையும் 'த இந்து' வெளியிட்டிருக்கிறது.

நானும் டி.எஸ்.சுப்பிரமணியனும் சேர்ந்து எடுத்த பிரபாகரனின் விரிவான பேட்டி இந்திய அளவில் பேசப்பட்ட ஒன்று. ஜெயவர்த்தன அதிபராக இருந்தபோது 'த இந்து' செய்தியாளர டி.பி.எஸ்.ஜெயராஜ் கடுமையான சட்டப் பிரிவுகளின் கீழ் கைதுசெய்யப்பட்டார். நான் கொழும்பு சென்று ஜெயவர்த்தனவுடன் பேசினேன். சர்வதேச பத்திரிகையாளர் சந்திப்பில குரல் எழுப்பினோம் அவர் விடுவிக்கப்பட்டார். இவை எல்லாம் வரலாறு.

விடுதலைப் புலிகளை ஆரம்பத்தில் நாங்கள் பரிவோடு தான் அணுகினோம். அவர்களுடைய நியாயங்களை எழுதினோம். ஆனால்ரொம்ப சீக்கிரமே 19ம் பக்கம் பார்க்க

# டிப்பர் வாகனம் மோதியதில் தாயும் சிசுவும் சிதறிப் பலி

## புத்தாண்டு தினத்தில் சோகம்

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தை முன்னிட்டு ஆலய வழிபாட்டுக்குச் சென்ற இளம் தாயும் சிசுவும் ஆனையிறவுப் பகுதி ஏ9 வீதியில் நேற்று புதன்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பலியாகியுள்ளனர்.

அவர்களுடன் பயணித்த குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புதுவருடத்தை முன்னிட்டு ஆனையிறவு பகுதியிலுள்ள தேவாலயத்திற்குச் சென்று வழிபாடுகளை முடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிந்த போதே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த போது பின்னால் வந்த டிப்பர் வாகனம் ஒன்று இவர்கள் மீது மோதியதால் இந்த விபத்து இடம் பெற்றிருக்கலாம் என கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் முக்கொம்பன் பூநகரி பகுதியைச் சேர்ந்த செந்தூரன் சுலோகினி (வயது 22) என்ற இளம் குடும்பப் பெண்ணும் செந்தூரன் கின்சிலி (பிறந்து 21 நாட்கள்)ஆனபெண்குழந்தையுமே சம்பவ இடத்தில் 19ம் பக்கம் பார்க்க

# கண்ணி வெடியில் சிக்கிய குடும்பப் பெண் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.எழுதுமட்டுவாழ் ஒட்டவெளி பகுதியில் கண்ணிவெடியில் சிக்கிய பெண் ஒருவர் தனது காலொன்றை இழந்துள்ளார்.

அதே பகுதியினைச் சேர்ந்த சந்திரசேகரம் புஸ்பமலர் (35) என்ற குடும்பப் பெண்ணே விறகு எடுப்பதற்காக நேற்று புதன்கிழமை பிற்பகல் காணியொன்றிற்குள்சென்றவேளையிலேயே கண்ணிவெடியில் சிக்கியுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் தொடர்ந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேற்படி பிரதேசத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கணணிவெடிகள் அகற்றப்பட்டு, அங்கு மீளக்குடியமர அண்மையிலேயே அனுமதி வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

# மசூதி மீது தாக்குதல்

(கண்டி)

கண்டி மாவட்டத்திலுள்ள மசூதியொன்று நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு அடையாளந் தெரியாத ஆட்களின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

புஜபிட்டியா பிரதேசத்திலுள்ள முல்லேகம மஸ்ஜிதுல் பலாஹ் மசூதி மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வாகனமொன்றில் வந்ததாக கூறப்படும் குழுவொன்றினால் மசூதியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கல் வீச்சு தாக்குதலில் ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

சிங்களவர்களும் முஸ்லிம்களும் இன ஐக்கியத்துடன் வாழும் இந்த பகுதியில் இடம் பெற்ற இந்த சம்பவம் உள்ளுர் மக்களை பெரும் அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு பௌத்த பிக்குமார்கள் உட்பட பிரதேச அரசியல்வாதிகள் என பலரும் நேரில் சென்று பார்வையிட்டு பள்ளிவாசல் நிர்வாகத் 20ம் பக்கம் பார்க்க

# காங்கிரஸ் ஆட்சியை அகற்ற பாரதிய ஜனதாவுடன் கூட்டணி

## வைகோ திடீர் அறிவிப்பு



(சென்னை)

இந்தியாவில் இவ்வருடம் இடம பெறவுள்ள தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான கூட்டணியில் இணைந்து போட்டியிட மதிமுக முடிவு செய்துள்ளது.

மதிமுக பொதுச்செயலாளர்வைகோ ஆண்டு தோறும் ஆங்கில புத்தாண்டு தினத்தில் சென்னையில் செய்தியாளர்களைச் சந்திப்பது வழக்கம். அதே போன்று சென்னையில் நேற்று புதன்கிழமை செய்தியாளர்களை சந்தித்த போது இதனை உறுதிப்படுத்தியுள்ளார். காங்கிரஸ் கட்சியை ஆட்சியைவிட்டு அகற்ற வேண்டும் என்பதுதான் மதிமுகவின் ஒரே நோக்கம் எனவும் அதனை நிறைவேற்ற சக்தி வாய்ந்த பாரதிய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி வைக்க முடிவு செய்துள்ளதாக இந்த செய்தியாளர் சந்திப்பில் வைகோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், பாரதிய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி தொடர்பில் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. ஏதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இடம்பெறும் மதிமுகவின் பொதுக்குழுவில் கூட்டணி குறித்த இறுதி முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

இந்தியாவில் இவ்வருடம் இடம பெறவுள்ள தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி 19ம் பக்கம் பார்க்க

# ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை

## தெற்காசிய சுதந்திர ஊடக சங்கம் அறிக்கை


(கொழும்பு)

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு பூரண பாதுகாப்போ, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமோ இல்லை என தெற்காசிய சுதந்திர ஊடக சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் ஊடக் சுதந்திரம் பேணப்பட்டு வருவது குறித்து 2013ஆம் ஆண்டின் தனது சுட்டியில் அடங்கும் 179 நாடுகளுள் இலங்கை 162ஆம் இடத்தைப் பெற்றுள்ளதனால் எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் அமைப்பு அதனை தீவிர கண்காணிப்பின் கீழ் உள்ள நாடொன்றாக வகைப்படுத்தியிருந்ததை தெற்காசிய சுதந்திர ஊடக சங்கம் வெளியிட்டிருந்த தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. 20ம் பக்கம் பார்க்க

# பட்ஜெட் தோல்வி மூலம் அரசின் வீழ்ச்சி உறுதி!

## கலாநிதி விக்கிரமபாகு தெரிவிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளில் வரவு செலவுத் திட்டங்கள் தோல்வியடைவதன் மூலம் அரசாங்கம் வீழ்ந்து வருவதை காண முடிவதாக நவ சமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் போதைப் பொருள், மது பெருமளவில் பரவி வருகிறது. இதன் காரணமாக நாட்டின் பிரதமர் கூட போதையாளராக மாற்றப்பட்டார்.

அத்துடன் அரசாங்கத்தின் பிரதானமான வருவாய் ஈட்டும் வழிமுறையாக கசினோ சூதாட்டம் மாறியுள்ளது. உலக முழுவதிலும் விலை மாதர்களை அழைத்து வந்து இலங்கையில் விபச்சாரம் செய்து வருகின்றனர்.

இனவாதம், மதவாதம், வன்முறைக்கு வித்திடும் பொது பல சேனா போன்ற அமைப்புகள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் இயங்கி வருபவை. இவர்கள் மூலமாக பௌத்தர்கள் அல்லாதவர்களுக்குஎதிராக குழப்பங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

இலங்கையின் கிறிஸ்தவ சங்கங்களின் குரல் ரோமில் உள்ள பாப்பாண்டவர் வரை சென்றுள்ளது. ஏனைய மதங்களின் வணக்கஸ்தலங்களை 20ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்கள் 45 பேர் அரசிலிருந்து வெளியேறுவர்!

## அதிருப்தி அதிகரிக்கிறது என்கிறது ஐ.தே.க

அரசாங்கத்தில் அதிருப்தி கொண்டுள்ள 40 முதல் 45 வரையான முக்கிய அமைச்சர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

மினுவங்கொட பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியில் பிரச்சினைகள் அதிகமாக இருப்பதாக அரசாங்கம் கூறி வந்தாலும் அதிகளவான பிரச்சினை அரசாங்கத்திற்குள்தான் இருக்கின்றது.

அரசாங்கத்தில் இருக்கும் 40 முதல் 45 வரையிலான முக்கிய அமைச்சர்கள் அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொண்டுள்ளதுடன் அவர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் நிலைமை காணப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியில் பாரிய பிரச்சினைகள் எதுவுமில்லை. சிறிய பிரச்சினையே உள்ளது. இது குறுகிய காலத்தில் தீர்க்கப்படும்.

அரசாங்கத்திற்குள்ளேயே தற்பொழுது பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியை வலுப்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தில் உள்ளவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய தயாராக உள்ளனர்.

கட்சிக்குள் இருக்கு சிறிய பிரச்சினைகளை சீக்கிரமாக தீர்த்து கொள்ளுமாறு அவர்கள் கூறுகின்றனர். கட்சியின் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வர சஜித் பிரேமதாச, தலதா அத்துகோரள ஆகியோர் தலைமைத்துவச் சபையில் இருக்க வேண்டும்.

அரசாங்கம், சீனாவிடம் கடனை பெற்று சிக்கிக் கொண்டுள்ளது. இதன் காரணமாக வரி விதிப்புகளை அதிகரித்துள்ளது. அரசாங்கம் கட்டான பிரதேசத்தில் 5 கசினோ நிலையங்களை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது.

கிராமத்தில் உள்ளவர்கள் கசினோ சூதாட்டத்திற்கு அடிமையானால் குடும்ப பொருளாதாரம் வீழ்ச்சியடையும். எதிர்காலத்தில் அமையும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் கீழ் நாட்டின் ஊழல் மோசடிகள் முடிவுக்கு கொண்டு வரப்படும் என்றார் ருவான் விஜேவர்தன(செ-11)


தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் · அன்பளிப்பு பொருட்கள் · உடுபுடவைகள்

CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-6071)


# புதுவருட வழிபாட்டில் ஈடுபட்ட ஜனாதிபதி

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரலாற்று சிறப்புமிக்க கதிர்காமக் கந்தன் மற்றும் கிரிவெஹர ஆகிய ஆலயங்களில் நேற்று முன்தினம் இரவு வழிபாடுகளை நடத்தி புதுவருடத்திற்கான ஆசிகளை பெற்றுக் கொண்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு கதிர்காம கந்தன் ஆலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பூஜை வழிப்பாடுகளில் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

அத்துடன் கிரிவெஹர விகாரையில் நடைபெற்ற வழிபாடுகளிலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

இதனை தவிர கதிர்காமத்தில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசலில் நடைபெற்ற விசேட பிரார்த்தனையிலும் ஜனாதிபதி கலந்து கொண்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வழிப்பாடுகளில் ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ உட்பட பலர் கலந்து கொண்டனர். (செ-11)



கொழும்பு ஹில்டன் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் விசேட பிரமுகர்களின் மேடை சரிந்து விழுந்ததுள்ளமையினால் பலர் காயமடைந்துள்ளனர். இந்த சம்பவத்தினால் ஹோட்டல் வளாகத்தில் எல்லா இடங்களிலும் இரத்தம் சிந்திக் கிடந்தது. நேற்று முன்தினம் நடத்தப்பட்ட புதுவருட விருந்துபசாரத்தின் போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதியின் மகன் உட்பட பல முக்கியஸ்தர்கள் அமர்ந்திருந்த மேடையே இவ்வாறு பொறிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் கேளிக்கைகளில் ஈடுபட்டிருந்த பலர் காயமடைந்தனர். இந்த மேடையில் சுமார் 200 பேர் வரையிலும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லூர்க் கோட்டத்திற்கு பணிப்பாளர் நியமனம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோடடக் கல்விப்பணிப்பாளராக அ.அகலதாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இவருக்கான நியமனத்தை வழங்கியுள்ளார்.

நேற்றையதினம் நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவியேற்றுள்ள அ.அகிலதாஸ் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கொககுவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றில அதிபராகக் கடமையாற்றியிருந்த துடன் தீவகக் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ந)

## நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தில் விடைத்தாள் திருத்தும்பணி

(யாழ்ப்பாணம்)

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த(சா/த) பரீட்சை-2013 இன் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறுவதனால், 2014-ம் ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 8-ம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகுமென கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

அத்துடன் இக் கல்லூரி ஆசிரியர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரியின் கணணி விரிவுரை மண்டபத்தில் நடைபெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (செ-2)

# தனியார் பேருந்து மீது கல்வீச்சு; 3பேர் காயம்

(மல்லாவி)

முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த யாழ்.மாவட்ட தனியார் பேருந்து ஒன்று மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களின் கல்வீச்சு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

இச் சம்பவம் நேற்று மாலை 3.30 மணியளவில் விசுவமடு உழவது சந்தியில் இடம்பெற்றது.

இதில் பேருந்தின் சாரதி பக்க கண்ணாடி மற்றும் பயணிகள் பக்க ஜன்னல் கண்ணாடிகள் உடைந்ததோடு பேருந்தில் பிரயாணம் செய்த மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மூவரும் தர்மபுரம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸாரும் புதுக்குடியிருப்பு பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் இலக்கம் தெளிவாக குறிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(செ-15)

# மரண அறிவித்தல்

## அமரர் வைத்திலிங்கம் தியாகரமூர்த்தி



(மண்டைதீவு)

மண்டைதீவு கிழக்கை பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தியாகரமூர்த்தி 30.12.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம்-சின்னம்மா தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்ற ஆறுமுகம் பத்மாவதி தம்பதியினரின் மருமகனும் அமரர் மதுரநாயகியின் அன்புக் கணவரும் சுஜாதா (சுவிஸ்), கவிதா, தேவகி ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலாஜி(சுவிஸ்),பிரபாகரன் (பிரபன்) ஆகியோரின் மாமனாரும் அபிநயா (சுவிஸ்), ஆராதனன் (சுவிஸ்) ஆகியோரின் அருமைப் பேரனும் காலஞ் சென்றவர்களான தங்கச்சியம்மா, திலகவதி, திருப்பதி, தில்லைவனம், சித்திரம், செல்வம் மற்றும் சின்னமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற கனகசபை, சிவசம்பு, பரமானந்தம் மற்றும் கந்தசாமி காலஞ்சென்ற பரமலிங்கம், யோகாம்பிகை மற்றும் பஞ்சாட்சரம், பாக்கியலட்சுமி, கணேசமூர்த்தி, லட்சுமிதேவி ஆகியோரின் மைத்துனரும் சுதானந்தராஜா, தயாளனின் தாய் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.01.2014 வியாழக்கிழமை கலட்டி ஒழுங்கை கோண்டாவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 12 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலட்டி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு.

(இ)

தகவல்: குடும்பத்தினர்.

# ஆறாம் ஆண்டு நினைவலைகள்




## அமரர் தவசிப்பிள்ளை இராமலிங்கம்

(ஓய்வு பெற்ற பஸ் காப்பாளர்)

திதி-மார்கழிப் பூர்வபக்க துதியை-02.01.2014

அவனி விட்டகன்று ஆண்டவன் அடி சேர்ந்து
ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்த போதும்
அன்றலர்ந்த தாமரையாய் உங்கள் அன்பு நினைவுகள்
என்றும் எம்மனதில் இனிமையாய் நிறைந்திருக்கும்

243, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்.

(c-6073)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கனவு வியாபாரிகள்!

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார் .

அவர் ஒரு நாள் ஒரு கனவு கண்டார் .

அந்தக் கனவிலே கறுப்பாக ஒரு உருவம் வந்து அவர் முன்னால் நின்றது.

அவர் பயந்துவிட்டார் .

"நீ யார்? " என்று கேட்டார் .

"நான்தான் எமன் ! " என்று அது கூறிற்று!

"எதற்காக வந்திருக்கிறாய்" என்று கேட்டார்.

"உனக்கு ஞாபகப்படுத்துவதற்காக வந்திருக்கிறேன். சரியான இடத்திலே சரியான நேரத்திலே என்னை சந்திக்க மறந்து விடாதே! அதை சொல்லி விட்டுப் போவதற்காகத்தான் வந்திருக்கிறேன். போய்வருகிறேன் !"என்று கூறி விட்டு அது மறைந்து விட்டது.

உடனே ராஜா அதிர்ச்சியில் முழித்தார் .கனவு கலைந்தது. இருந்தாலும் கலக்கம் குறையவில்லை !நள்ளிரவு நேரம் தூக்கம் வரவில்லை.

உடனே தம்முடைய அமைச்சர்கள், ஆலோசகர்கள், அரண்மனை சோதிடர்கள் அனைவரையும் அழைத்தார் . அவர்கள் அனைவரும் வந்து சேர்ந்தார்கள்.

இவர் தான் கண்ட கனவை சொன்னார் .

அதற்கு என்ன அர்த்தம் என்று கேட்டார் .

ஆளுக்கு ஒரு அர்த்தம் சொன்னார்கள்.

எதுவுமே தெளிவாகவில்லை!

அவர்களுக்குள்ளேயே விவாதம் சச்சரவு ஆரம்பமாகிவிட்டது!

அவ்வேளை ஒரு வயதான பெரியவர் அங்கே வந்தார் .

அவர் அரண்மனையிலே ஒரு வேலைக்காரர்.

மன்னரை சிறிய வயதிலிருந்து வளர்த்தவர்.

அவர் வந்து மன்னரின் காதோடு காதாக சொன்னார் .

"நேரத்தை வீணாக்க வேண்டாம் ... இவர்கள் வருடக் கணக்கில் சண்டை பிடித்துக்கொண்டே இருப்பார்கள். முன்னரும் அப்படித்தான் செய்தார்கள் .

இந்தத் தத்துவ ஞானிகள், தீர்க்கதரிசிகள், ஜோதிடர்கள் இவர்கள் எல்லாம் எந்தக் காலத்திலேயும் ஒருமித்த கருத்தைச் சொன்னதே கிடையாது.

விடியப் போகிறது .... நேரமும் அதிகமில்லை . அதனாலே என்னுடைய யோசனை என்னவென்றால்.......

மிகவும் வேகமாகப் போகக்கூடிய ஒரு குதிரையிலே ஏறி இந்த இடத்தை விட்டுத் தப்பிச்சென்றுவிடுங்கள் !"என்றார்.

மன்னருக்கும் அதுதான் சரி என்று தென்பட்டது.

"இவர்கள் இப்படியே விவாதம் செய்துகொண்டே இருக்கட்டும்.... அதையெல்லாம் நான் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். நீங்கள் புறப்படுங்கள்"! என்று அவசரப்படுத்தினார் அந்தப் பெரியவர்.

மன்னர் உடனே அந்த இடத்தை விட்ட மெதுவாக நழுவினார். அவருடைய அதிவேகக் குதிரை மேலே ஏறினார். குதிரை பறக்க ஆரம்பித்தது.... அவ்வளவு வேகம். மாலை நேரத்துக்குள்ளே நீண்ட தூரம் வந்துவிட்டார். நூற்றுக் கணக்கான மைல்கள் தாண்டி வந்துவிட்டார்.

ஏதோ ஒரு . ஊர். அந்த ஊர் எல்லையிலே ஒரு சோலை. அங்கே ஓய்வெடுக்கலாம் என்று முடிவு செய்தார்.

குதிரையை ஒரு மரத்தடியிலே கட்டினார்.

இவ்வளவு வேகமாக ஓடிவந்த அந்த குதிரைக்கு நன்றி சொன்னார்.

இரு... உனக்கு தண்ணீருக்கும் தீனுக்கம் ஏற்பாடு செய்கிறேன்.

அவருக்கு நல்ல பசி... தாகம்!

என்ன செய்யலாம் என்று நினைத்துக்கொண்டே திரும்பினார்.

அப்போது அவர் தோள் மீது ஒரு கை விழுந்தது. மன்னர் திரும்பிப் பார்த்தார்.

கனவிலே வந்த அதே கறுப்பு உருவம்

அவர் முன்னால் சிரித்துக்கொண்டே நின்றது.

மன்னருக்கு அதிர்ச்சி "ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டார். அந்தக் கறுப்பு உருவம் சொல்ல ஆரம்பித்தது.

"இது தான் நான் சொன்ன இடம்! இது தான் நான் சொன்ன நேரம்! நீ சரியான நேரத்திலே வந்து இணைவியோ மாட்டியோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். சரியான நேரத்தில் உன்னை இங்கே கொண்டு வந்த உன்னுடைய குதிரைக்கு நன்றி!" என்று கூறினார்!

"மக்களிடம் கனவுகளைத் தவிர வேறு எதுவுமில்லை. நீண்ட காலமாக கனவுகளை விற்றுச் சுரண்டிப் பிழைக்கும் கனவு வியாபாரிகள் எங்கும் இருந்து தான் வருகிறார்கள். பதிலுக்கு மக்களுக்கு அவர்கள் எதுவுமே தருவதில்லை.

இதுவரை எல்லா மதங்களும் பலவீனமான மக்களிடம் கனவுகளை விற்றுச் சுரண்டும் வேலையைத் தான் செய்து வந்திருக்கின்றன!

அப்படி என்றார் ஓஷோ.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சுகாதார தொண்டர்களுக்கு ஏப்ரல் மாதம் நியமனம்

யாழ்.மாவட்ட சுகாதார தொண்டர்களுக்கு ஏப்ரல் மாதம் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என வட மாகாணசுகாதார அமைச்சர்பத்மநாதன் சத்திய லிங்கம் உறுதியளித்துள்ளார்.

வட மாகாண சுகாதார அமைச்சர் பத்மநாதன் சத்தியலிங்கம் தலைமையில் இடம் பெற்ற விசேட சந்திப்பின் போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் , யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் சுகாதார தொண்டர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக மாகாண சுகாதார அமைச்சர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சுகாதார தொண்டர்களுக்கான நியமன வெற்றிடங்கள் இதுவரையில் இல்லை. எனினும் வெற்றிடங்கள் தேவைப்படும் பட்சத்தில் எதிர்வரும் 2014ஆம்ஆண்டுஏப்ரல்மாதத்திற்குள் மத்திய சுகாதார அமைச் சருடன் கலந்துரையாடிய பின்னர் சுகாதார தொண்டர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படும்என்றார்.

இந்த சந்திப்பில் சுகாதார தொண்டர்கள் கருத்து தெரிவிக்கையில்,

வட மாகாணசுகாதாரஅமைச்சரின் வாக்குறுதியினை தொடர்ந்து தமது போராட்டத்தினை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம்.

எனினும் ஏப்ரல் மாதம் நிரந்தர நியமனம் தமக்கு வழங்கத் தவறினால் மீண்டும் தமது போராட்டத்தினை முன்னெடுப்போம் என்றனர். (அ-6)

# புலமைப்பரிசில் பரீட்சையை நீக்குமாறு கோரவில்லை

## ஆணைக்குழு தெரிவிப்பு

5 ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையை நீக்கும்படி கூறவில்லை எனவும் இந்த பரீட்சையை இலகுபடுத்தும் ஆலோசனைகளையே தேசிய கல்வி ஆணைக்குழு கூறியுள்ளதென தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சை இப்போது போல ஓகஸ்ட்டில் விசேட பரீட் சையாக நடத்தப்படாமல் ஆண்டிறுதி பரீட்சையுடன் சேர்த்து நடத்தப்பட வேண்டும். இது ஒரு மணித்தியாலத்தில் முடியும் வினாத்தாளை மட்டுமே கொண்டிருக்கும். இதிலுள்ள வினாக்கள் அந்த வயது குழுவினரால் இலகுவாக விளங்கும் வகையில் அமைய வேண்டும் என தேசிய கல்வி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

தற்போதைய பரீட்சையானது மாணவர்களுக்கு மிகவும் கடினமானதாக காணப்படுகின்றது. இது மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் பெரும் சுமையானது. இந்த பரீட்சையானது பல மாணவர்களுக்கு மன அழுத்தத்தையும் உளச் சோர்வையும் கொடுத்துள்ளது என ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இந்தப் பரீட்சை மாணவர்களுக்கு ஓய்வு நேர சந்தோஷங்களையும் சிறுவர் பராய அனுபவங்களையும் மறுத்து வந்துள்ளதென ஆணைக்குழு கூறியுள்ளது. (அ-2)

# மாட்டுவண்டி சவாரி போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

வடக்கு மாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சு எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியொன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. இப் போட்டியானது நான்கு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

இம் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி மூளாய் பொன்னாலைச் சவாரித்திடலில் தைப்பொங்கல் நாளான 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது. காளைகளை எவ்விதத்திலும் துன்புறுத்தலாகாது என்ற நிபந்தனையுடன் நடத்தப்படவுள்ள இப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு எதிர்வரும் 10 ஆம் திகதி ஆகும்.

விண்ணப்பப் படிவங்களை இல.295, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள விவசாய அமைச்சின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்வதோடு, போட்டி தொடர்பான மேலதிக விபரங்களை 077 8449739 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

இம்மாபெரும் மாட்டுவண்டிச் சவாரியில் பெற்றிபெறும் போட்டியாளர்களுக்கான பரிசுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள உழவர் பெருவிழாவின்போது வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 70 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 30 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 100 | 120 |
| தக்காளி | 80 | 60 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 20 | 20 | 60 | 40 |
| கரட் | 40 | 40 | 40 | 80 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100-160 | 180 | 200 | 160 |
| பெரிய வெங்காயம் | 60-90 | 100 | 170 | 80 |
| பாகற்காய் | 100 | 140 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 20 | 30 | 30 | 40 |
| பயற்றங்காய் | 60 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 70 | 70 | 90 | 100 |
| பீற்றூட் | 50 | 60 | 100 | 80 |
| கறிமிளகாய் | 100 | 150 | 120 | 160 |
| முருங்கைக்காய் | - | 400 | - | 320 |
| போஞ்சி | 80 | 60 | 90 | 80 |
| கத்தரி தம்புள்ள | 50 | - | - | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 40 | 35 |
| தேசிக்காய் | 50 | 40 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 120 | 130 | 120 |

# இராசி பலன்

02.01.2014

(மார்கழி 18, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.23. மணிக்கு

பிரதமை பிற்பகல் 3.18 மணிவரை

பூராடம் பிற்பகல் 10.09 மணிவரை

இராகுகாலம் 2.00-3.30 மணிவரை

சுபநேரம் 8.00-9.30 மணிவரை

**மேடம்** ஆன்றோர் சந்திப்புண்டு, புதிய திட்டங்கள் வகுப்பீர்கள், தேவையற்ற பயம் உருவாகும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

**இடபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பிறருக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, செலவுகள் அதிகமாகும், பயந்த சுபாவமுண்டு.

**மிதுனம்** தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், செல்வாக்கான நாள்.

**கடகம்** உடல் நலன் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் ஒத்தாசைகள் கிடைக்கும்.

**சிங்கம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப காரியப் பேச்சுகள் முடிவாகலாம்.

**கன்னி** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், தொலைபேசி மூலம் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும், பெற்றோர் மீது பாசம் கூடும்

**துலாம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், சேமிப்பை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் உருவாகும்

**விருச்சிகம்** உறவினர் வருகையுண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை, நண்பர்கள் மூலம் புதிய தகவல்கள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சிக்கு அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு** மற்றவர்கள் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்** வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணத்தால் பிரபல மானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும்.

**கும்பம்** உன்னதமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், தித்திக்கும் தகவல்கள் வந்து சேரலாம்.

**மீனம்** வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில்ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் சுப செய்திகள் வந்து சேரலாம்

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துவிச்சக்கரவண்டியை பறிகொடுத்த திருடன்

(யாழ்ப்பாணம்)

ஆயிரம் ரூபாவுக்கு ஆசைப்பட்ட திருடன் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான துவிச்சக்கர வண்டியை பறிகொடுத்த சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,


யாழ்.கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலி கேணியடிப் பகுதியில் இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது, மேற் குறிப்பிடப்பட்ட பகுதியிலுள்ள தோட்டக் கிணற்றினுள் நீர் இறைப்பதற்காகப் பொருத்தப்பட்ட குழாயின் கீழ்ப்பகுதியில் (புட்வார்) இருந்த பித்தளையிலான சாசனத்தை திருடிச் செல்ல முற்பட்ட திருடன் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

தகவலையடுத்து கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த திருடன் அங்கிருந்து தப்பித்து சென்றுள்ளான். அதன் பின்பு அப்பகுதியிலிருந்துதுவிச்சக்கரவண்டியொன் றை பொலிஸார் மீட்டனர்.

குறித்த துவிச்சக்கரவண்டி திருடனால் கொண்டு வரப்பட்டது எனவும் அதன் பெறுமதி 10 ஆயிரம் ரூபா பெறுமதியிருக்கும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-6)




# பாதிக்கப்பட்ட அங்காடி வியாபாரிகள் அமைச்சர் ஐங்கரநேசனுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெரு யாழ். வேம்படி வீதியில் அமைக்கப்பட்டுபின்னர் அகற்றப்பட்ட அங்காடிக் கடைகளால் பாதிப்படைந்த வியாபாரிகள் தமது நிலைமையை தெரியப்படுத்தி வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அதன் விவரம் வருமாறு,

யாழ்.மாநகரசபையால் அங்காடி கடை வியாபாரிகளுக்கு முதலாம் குறுக்குத் தெரு வேம்படி பாடசாலை வீதியில் நூறு கட்டடத் தொகுதிகள் கட்டப்பட்டன. யாழ் .மாநகர மேயர் அங்காடி வியாபாரிகளுடன் கதைத்து யாழ். மாநகர சபையால் நியமிக்கப்பட்ட கட்டட ஒப்பந்தக்காரரால் கட்டப்பட்டது.

கட்டட செலவுகளை எங்களை ஏற்கும் படியும் தண்ணீர்,மலசலகூடவசதிகள், மின்சாரம் போன்றவை யாழ்.மாநகர சபையால் செய்து கொடுக்கப்படும் என்றும் உறுதி அளிக்கப்பட்டது.

இதன் நிமிர்த்தம் ஒவ்வொரு வியாபாரிகளிடம் இருந்து ரூபா நாற்பதாயிரம் தொடங்கி ரூபா அறுபதாயிரம் வரை அறவிடப்பட்டது.

இக்கடைகள் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பங்குனி மாதம் 2013 இல் திறந்து வைக்கப்பட்டது.

கடைகள் கட்டுவது சம்பந்தமாக வியாபாரிகளை அழைத்து ஈ.பி.டி.பி. காரியாலயத்திலும் யாழ்.மாநகரசபை கந்தோரிலும் கதைத்து முன் கூறியபடி கட்டடம் அமைப்பற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ்.மாநகரசபையால் உறுதி அளித்தபடி தண்ணீர், மலசலகூடவசதிகள், மின்சாரம் போன்றவை அமைத்துக் கொடுக்காத படியால் வியாபாரிகள் அங்கு கடைகளை நடத்த முன்வரவில்லை.

அதன் பின்பு 14.10. 2013 இல் மாநகர சபையால் இந்தக் கடைகள் முழுவதும் அகற்றப்பட்டுக்கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக அங்காடி வியாபாரிகள் யாழ். மாநகரசபை மேயரிடம் வினவிய போது இக் கடைகளுக்கும் மாநகர சபைக்கும் சம்பந்தம் இல்லை என்று மேயரால் கூறப்பட்டது. ஆகவே தங்களிடம் நாங்கள் கேட்பது கடை கட்டுவதற்கு கடன்பட்டுத்தான் நாங்கள் பணம் கொடுத்தோம்.

எங்கள் நிலைமையை உணர்ந்து தாங்கள் நடவடிக்கை எடுத்து எங்களுக்கு உதவி செய்யும் படி கேட்டுக் கொள்கின்றோம் என்று அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# இந்து மகளிர் மன்ற நிர்வாகத் தெரிவு

(கரணவாய்)

பொலிகை மருதாம்புலம் அம்பிகை இந்து மகளிர் மன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை பொலிகை பத்திர காளி அம்பாள் ஆலய முன்றலில் இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் நிர்வாகசபைத் தெரிவு இடம்பெற்றது. இதன்போது தலைவர் திருமதி ஜெ.நிசாலினி, உப தலைவர் திருமதி ம.தெய்வ நாயகி, செயலாளர் ச.ஜனனி, உப செயலாளர் திருமதி ஐ.அதீபா, பொருளாளர் திருமதி மூ. திருவட்செல்வி ஆகியோர் தெரிவாகினர். 10 நிர்வாக உறுப்பினர்களும் போசகராக திருமதி க.பத்மநாயகி, கணக்கு பரிசோதகராக ச.சித்திரா ஆகியோரும் தெரிவாகினர். (அ-2-60)




# தே.இ.சேவை மன்றத்துக்கு உதவிப் பணிப்பாளர் நியமனம்

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்டக் காரியாலயத்திற்கு புதிய உதவிப் பணிப்பாளராக ஐ.தபேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களாக வெற்றிடமாக இருந்த குறித்த பதவிக்கு பொருத்தமான ஒருவரை நியமிக்குமாறு யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனமும் மாவட்டக் காரியாலயமும் கேட்டுக் கொண்டதற்கிணங்க இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சினால் இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியாக கடமையாற்றியவரே பதவி உயர்வுடன் உதவிப் பணிப்பாளராக யாழ்.மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந் நியமனமானது 01.01.2014 லிருந்து அமுலுக்கு வந்துள்ளது. புதிதாக பதவியேற்கவுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஐ.தபேந்திரனை வரவேற்கும் நிகழ்வுகள் நேற்று 10 மணியளவில் கச்சேரி கிழக்கு ஒழுங்கைப் பகுதியிலுள்ள மாவட்டக் காரியாலயத்தில் இடம்பெற்றுள்ளது. (அ-2-23)

## கற்கைநெறிக்கு புலமைப்பரிசில்

தற்போது உயர்ந்த தொழில்வாய்ப்பை யுடைய ஐக்கிய இராச்சிய பட்டயக் கணக்காளர் சான்றிதழுக்கான யாழ்.மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு CIMA UK நிறுவனம் மாணவர்களிற்கான பதிவுக் கட்டணம் 17 ஆயிரம் ரூபாவை குறைத்துள்ளது.

மேலும் யாழ்.MCS நிறுவனம் CBA பாடக்கட்டணம் 34 ஆயிரம் ரூபாவை புலமைப் பரிசில்களாக வழங்கவுள்ளது. புலமைப்பரிசில் முடிவு திகதி இம்மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையாகும். இது தொடர்பான மேலதிக விபரங்களை யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் உள்ள எம்.சி.எஸ். வளாகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (அ-9)

## தெய்வீகப்பேருரை

திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச் சந்தி திருவருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மகோற்சவ பெருவிழா இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை 18 தினங்கள் நடைபெறவுள்ளது.

இம் மகோற்வத் தினங்களில் தினமும் 5.30 மணிக்கு வர்ணணைக் கலாநிதி மதுர கவி காரை.எம்.பி.அருளானந்தன் தெய்வீகப் பேருரையை வழங்கவுள்ளார். (அ)

# வாள்களுடன் சென்ற மூவருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வாள்களுடன் முச்சக்கரவண்டியில் சென்ற குற்றச்சாட்டின் பேரில் கைதான மூவரையும் ஒரு இலட்சம் ரூபா சரீர பிணையில் செல்ல யாழ். நீதவான் நீதமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தின் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சிறிநிக சஞ்சீவ ஜெயக்கொடி தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.கோண்டாவில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 29 ஆம் திகதி இரவு 10 மணியளவில் முச்சக்கரவண்டியொன்றினை சோதனையிட்ட கோப்பாய் பொலிஸார், அதிலிருந்து வாள்களைக் கைப்பற்றியதுடன் அவ் வண்டியில் பயணித்த மூவரையும் கைது செய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் கடந்த திங்கட்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதவான் மேற்படி மூவரையும் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதியளித்தார் என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (அ-6)






வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திலும் பிரதம செயலாளின் அலுவலகத்திலும் கல்வி அமைச்சிலும் அரச உத்தியோகத்தர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று நடைபெற்ற போது...
(படங்கள்:-என்.குமார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன அழிப்புடன் தொடர்புடைய இராணுவத்திற்கு பொது மன்னிப்பு வழங்க இடமே கிடையாது

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்) ——

**இலங்கை தமிழினத்திற்கு எதிராக இடம்பெற்ற இன அழிப்பு நடவடிக்கைக்கு நேரடியாக தொடர்புடைய இராணுவத்தினருக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கு இடமே கிடையாது என சுட்டிக்காட்டியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை மூலம் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என மீண்டுமொரு முறை வலியுறுத்தியுள்ளது.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன் மற்றும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம், மனித நேயக் குற்றங்கள் தொடர்பாக எப்படி நாம் அணுகப் போகின்றோம் என்பது பெரும் கேள்வியாகவுள்ளது.

இலங்கையில் கடந்த 65 வருடங்களுக்கு மேலாக தமிழருக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டு இருப்பது இன அழிப்பே. இது முள்ளிவாய்க்காலுடன் முடிவிற்கு கொண்டு வரப்படவில்லை. தற்பொழுதும் தொடர்ந்து கொண்டே செல்கிறது.

தமிழ்த் தேசியத்தை இந்த நாட்டிலிருந்து இல்லாது ஒழிக்கும் நடவடிக்கை பல வழிகளிலும் தொடர்கிறது.

தமிழர்களின் பூர்வீக நிலங்கள் இராணுவத் தேவைகளுக்காக ஆக்கிரமிக்கப்படுகின்றது. அங்கு புத்தர் சிலைகளும் பௌத்த விகாரைகளும் அமைக்கப்படுகின்றன.

அத்தோடு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு தமிழ்த்தேசியத்தை அழிக்கும் நடவடிக்கை இங்கு தொடர்ந்து இடம்பெறுகின்றது.

இதனைவிட தமிழ் மக்களின் இன விகிதாசாரத்தை குறைக்கும் நோக்குடன் திட்டமிட்ட கட்டாயக் கருத்தடைகளுக்கு எமது தமிழ்ப் பெண்கள் உட்படுத்தப்படுகின்றனர். பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுகின்றனர்.

எனவே எமது இனம் அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும். தற்போது எமது இனம் பல பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றது. எனவே இந்த அழிவிலிருந்து எமது இனத்தை பாதுகாத்துக் கொள்வதே உடனடித் தீர்வாகும்.

ஈழத் தமிழர் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவும் அதேவேளை ஏற்றுக் கொள்ளக் கூடிய அணுகுமுறையாக நிலை மாறு கால நீதி (ரி.ஆர்.சி.) அணுகுமுறை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது ஈழத்தமிழரினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய அணுகு முறையாக அமையுமா? என்பதற்கு அப்பால் பொறுப்புக் கூறலில் நிலை மாறு கால நீதி அணுகுமுறையாக வைக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களுக்கும் கறுப்பு இனத்தவர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்ட பின்பு இந்த அணுகுமுறை முன்வைக்கப்பட்டது. அதாவது மோதலுக்கும் தீர்வுக்கும் இடையில் பாலமாக இந்த அணுகு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

விட்டுக் கொடுப்பு என்ற பெயரில் தீர்வு எட்டப்பட்ட நிரந்தரத் தீர்வு அமைய வேண்டும் என்பதற்காக மோதலுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு நடத்தி பொறுப்புக் கூறலின் பின்பு பொது மன்னிப்பு வழங்குவது ஜனநாயகம்.

ஆனால் இலங்கையில் அவ்வாறு இடம்பெறவில்லை. இராணுவத்தின் ஊடாக தமிழினம் அழிக்கப்பட்டு ஈழத்தமிழர்கள் கைதிகளாக இருக்கின்றனர். இலங்கையில் நிலை மாறு கால நீதியில்லை. தீர்வு இருந்தால் தான் நிலைமாறு கால நீதி உருவாக்கப்படுவதில் பலன் ஏற்படும்.

இலங்கையில் ஜனநாயகம் இல்லை. தமிழருக்கு நிரந்தர அரசியல் தீர்வில்லை. தமிழினம் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகின்றது. ஊடகங்கள் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை. வெளிநாட்டு பிரதி நிதிகளுடன் சந்தித்து பேச முடியவில்லை.

பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரின் அச்சுறுத்தல்கள் தொடர்கின்றது. இவ்வாறு தமிழினம் தொடர்ந்து அடக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றது. இந்நிலையில் நிலைமாறு கால நீதிக்கு இடமேயில்லை.

எனவே தமிழினத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சுமார் 65 வருட கால இன அழிப்புக்கு சர்வதேச விசாரணை பக்கச் சார்பற்ற முறையில் நடத்தப்பட வேண்டும் எனவும் 2014 ஆம் ஆண்டு ஈழத்தமிழருக்கு மிகவும் முக்கியமான ஆண்டாக அமையப் போகின்றது எனவும் தெரிவித்த அவர் தமிழ் மக்கள் பிழையான அணுகுமுறைகளுக்கு துணை போவதை தவிர்த்துக் கொள்ள வேண்டிய ஆண்டாக இந்த ஆண்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-4-6)

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குங்கள்

## கரைச்சி பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றம்

எதிர்வரும் 2014ஆம் ஆண்டு மே 18 அன்று உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகின்ற நிலையில் அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு அளிக்குமாறு கரைச்சிப் பிரதேச சபை தீர்மானமொன்றை நிறைவேற்றி ஜனாதிபதியிடம் கோரிக்கையொன்றை விடுத்திருக்கிறது.

இம்மகஜரில் தெரிவிக்கப்பட்ட விடயம் யாதெனில் "யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் பல நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகள் இலங்கையின் பல்வேறு சிறைகளில் பல்லாண்டு காலமாக அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். விசாரணைகளின்றியும் விடுதலையின்றியுமிருக்கின்ற அவர்களதும் அவர்களது குடும்பத்தினரதும் நெருக்கடிகளை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அன்புக்காக ஏங்குகின்ற அவர்களின் பிள்ளைகளின் ஏக்கங்களை உறவுக்காகக் தவிக்கின்ற தாய்மார்களதும் மனைவியர்களதும் ஏக்கங்களை நீங்கள் ஒரு தந்தை என்ற நிலையில் இருந்து புரிந்து கொள்ள வேண்டும். போருக்குப் பிந்திய இந்த ஐந்து ஆண்டுகளில் வன்முறைக்கான எந்தப் பிரதிபலிப்புகளும் எமது சமூகத்திலிருந்து நிகழவில்லை என நீங்கள் உணர்வீர்கள்.

கலாசாரப் பண்புகளாலும், மத விழுமியங்களாலும் உலகில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கின்ற நாங்கள் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் நம்பிக்கையினையும் கட்டி வளர்ப்பதில் இவ் அரசியல் கைதிகள் விவகாரம் பெரும் தடையாக இருக்கின்றது. இதனால் ஏற்பட்டிருக்கின்ற தனி மனித உணர்வுகள், உள நெருக்கடிகள், பொருளாதார கலாசாரப் பாதிப்புக்கள், வறுமை, வெறுமை, விரக்தி போன்றவற் றால் ஏற்படுகின்ற ஒட்டுமொத்த சமூகத்தின் பாதிப்புகளை உணர்வதற்காக எதிர்வரும் 2014. மே. 18 ஆம் திகதிக்கு முன்பதாக தங்களின் கருணை மிகுந்த பொது மன்னிப்பை தமிழ் அரசியல் கைதிகளுக்கு வழங்கு மாறு மக்கள் சார்பில் தயவுடன் கேட்டுக் கொள்கிறோம். இத்தகைய பொது மன்னிப்பு எமது நாட்டிற்கு உலகில் கீர்த்தியையும் பலத்தையும் பெற்றுத் தருமென்று எமது சபை திடமாக நம்புகிறது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மகஜர் கையளிப்பு நிகழ்வு நேற்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் செயலகத்தில் நடைபெற்றது. கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் நாவை.குகராசா ஜனாதிபதிக்கான மனுவினை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் கையளித்தார். இந்த நிகழ் வில் உபதவிசாளர் வ.நகுலேஸ்வரன், பிர தேச சபை உறுப்பினர்களான சு.தயாபரன், மா.சுகந்தன், சி.சுப்பையா, செ.புஸ்பராசா, ப.குமாரசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-4)

## கடைத் தொகுதிகள் அமைக்கப்படுகின்றன

வாழ்வெழுச்சித்திட்டத்தின் கீழ் 21 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டினூடாக மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களின் சந்தைக் கடைத்தொகுதிகள் அமைக்கப்பட்டு வருவதோடு வீதிகளும் புனரமைக்கப்பட்டு வருவதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் அ. தனிநாயகம் தெரிவித்துள்ளார். இந்நிதியூடாக பாலிநகர் பொதுச் சந்தையில் 16.7 மில்லியன் ரூபாவில் நவீன கடைத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளதோடு பாலிநகர் கிராமத்திலுள்ள மது சாலை வீதி 14.6மில்லியன் ரூபா நிதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (அ-9-15)

# சிறுநீரக நோய் தொடர்பான ஆய்வுகள் பணவிரயத்தையே ஏற்படுத்தும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

சிறுநீர்க நோய் தொடர்பிலான அரசாங்கத்தின் ஆய்வுகள் வெறும் பண விரயத்தை மட்டுமே ஏற்படுத்தும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

சிறுநீரக நோய் தொடர்பில் ஆய்வு நடத்த அரசாங்கம் 350 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளதாக சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் டாக்டர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சினால் நடத்தப்படவுள்ள இந்த ஆய்விற்கு நிதி உதவியை வழங்குவது தொடர்பிலான தீர்மானத்தை திறைசேரியின் ஆணையாளர் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். வட மத்திய, சப்ரகமுவ, வடக்கு, வட மேல் மாகாணங்களில் அதிகளவில் சிறுநீரக நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

இந்த நோய்க்கான காரணத்தையோ அதற்கான சரியான மருந்து வகைகளையோ இதுவரையில் சுகாதார அமைச்சு கண்டுபிடிக்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வெற்றியளிக்காத ஓர் ஆய்விற்காக அரசாங்கம் பாரியளவில் பணத்தை விரயம் செய்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# க.பொ.த.(சா/த) வரை வகுப்பு நடத்த அனுமதி

(முல்லாவி)

அரசாங்கத்தின் பின் தங்கிய பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மு/விநாயகர்புரம் அ.த.க. பாடசாலை தரம் -9 லிருந்து தரம்-11 வரை வகுப்புக்களை நடத்துவதற்கு வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனின் அனுமதி கிடைத்துள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இப்பாடசாலையானது மிகவும் பின் தங்கிய கிராமத்திலிருப்பதுடன் மாணவர்கள் தரம் 9 இற்கு பின்னர் பல மைல் தூரங்களிலுள்ள மு/துணுக்காய் அ.த.க.பாடசாலைக்கு அல்லது மு/ மத்திய கல்லூரிக்கு சென்று கல்வி கற்கும் நிலை காணப்பட்டது.

இதன் காரணமாக மாணவர்கள் பல கஷ்டங்களை சந்திப்பதனால் இடைவிலகும் சந்தர்ப்பமும் காணப்படுகின்றது.

இவ்விடயத்தை வடமாகாண கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட தன் பின் இப்பாடசாலையில் க.பொ.த. (சா/த) வரை வகுப்புக்களை நடத்த அனுமதி கிடைத்துள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-9-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை - ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கை தொடர்பிலான விமர்சனங்கள் பிழையானவை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து விமர்சனங்களை வெளியிடும் தரப்பினர் பிழையாக வழிநடத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கை மனித உரிமை நிலைமை குறித்து கடுமையான விமர்சனம் வெளியிடும் தரப்பினர் ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்திருக்க மாட்டார்கள் அல்லது புலி ஆதரவாளர்களாக இருப்பார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1983 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையில் இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் அறிந்து கொள்ளாது விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கை மனிதவுரிமை நிலைமைகள் குறித்து சர்வதேச சமூகத்தின் குற்றச்சாட்டுக்களுக்கு கடந்த கால அரசாங்கங்கள் உரிய முறையில் பதிலளிக்கத் தவறியமையே நிலைமை கைமீறிப் போகக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் ஆட்சி செய்த அரசாங்கங்கள் இலங்கையின் மனித உரிமை நிலைமை குறித்த தெளிவான விளக்கத்தை அளிக்கத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அநேகமானவர்கள் தோல்வியடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்களாகவே ஒலிக்க முயற்சிக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக சுமத்தப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை எனவும் போலிப் பிரசாரங்கள் எனவும் அவர் விபரித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் பௌதீக ஒருமைப் பாட்டை பாதுகாப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## அதிவேக வீதியில் பயணித்த 187 பேர் மீது வழக்கு

(கொழும்பு)

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் 187 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் மறுநாள் திங்கட்கிழமை காலை 6 மணிவரையான 24 மணித்தியால காலப்பகுதியில் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு மதுபோதையில் வாகனம் செலுத்திய மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய சாரதிகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# நிரந்தர நியமனம் வழங்குங்கள் தொழிலாளர்கள் கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா விவசாய பண்ணையில் பணியாற்றும் தொழிலாளர்கள் பலருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமையினால் தாம் பல சலுகைகளை இழந்து வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக தொழிலாளர்கள் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 15 முதல் 20 வருடங்களாக விவசாய பண்ணையில் பண்ணைத் தொழிலாளர்களாக நாட் கூலிக்கு பணியாற்றி வருகின்றோம்.

இதன் காரணமாக நாம் பல சலுகைகளை இழந்து வருவதுடன் எமது உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியாத துர்ப்பாக்கிய வாதிகளாக உள்ளோம்.

பண்ணையில் அனைத்து பணிகளை நீண்ட காலமாக செய்யும் எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் வேறு இடங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய சிலர் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக எம்மோடு நாள் சம்பள த்திற்கு பணியாற்றிய பலர் வேறு தொழில் வாய்ப்புக்களை எதிர்ப்பார்த்து சென்றுள்ளதுடன் சிலர் நிரந்தர நியமனம் கிடைக்காமலேயே ஓய்வு நிலைக்கும் சென்று விட்டனர்.

அண்மையில் எம்மோடு பணியாற்றிய பெண்ணொருவர் மின்னல் தாக்கத்திற்கு பலியான போது அவரது குடும்பத்திற்கு எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக அக்குடும்பம் பெரும் கஷ்டத்துடன் வாழ்ந்து வருகின்றது.

எனவே எமக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படாவிட்டால் எம் குடும்பத்திற்கு இந்நிலையே ஏற்படும். எனவே எமக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு விவசாய திணைக்கள அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர். (அ-9-266)

# நிபந்தனையற்ற அடிப்படையில் இலங்கை அரசுக்கு ஆதரவு

## ரஷ்யா தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு நிபந்தனையற்ற அடிப்படையில் ஆதரவளிக்கப்படும் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

நிபந்தனைகளின் அடிப்படையில் ரஷ்யா இலங்கைக்கு ஆதரவளிப்பதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரஷ்யாவின் நிலைப்பாட்டை அந்நாட்டு ஜனாதிபதி ஏற்கனவே அறிவித்துள்ளார். மேற்குலக நாடுகளின் ஆலோசனைகளை ரஷ்யா ஏற்றுக்கொள்ளாது என தெரிவிக்கப்படுகிறது.

இறுதிக்கட்ட போரின் போது ரஷ்யா இலங்கைக்கு உதவிகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பணிப்பெண்கள் தொடர்பில் சவுதி அரேபியாவுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

தமது நாட்டுக்கு வீட்டுப்பணியாளர்களை உள்வாங்கும் சவுதி அரேபியா, பணிப் பெண்களை அனுப்பும் 6 நாடுகளுடன் உடன்படிக்கைகளை செய்துகொள்ளவுள்ளது.

சவுதி அரேபியாவின் தொழில் அமைச்சர் அடில் பாகேக் இது தொடர்பான பயணம் ஒன்றை புதுடில்லிக்கு மேற்கொள் கிறார்.

பிலிப்பைன்ஸுக்கு அடுத்ததாக இந்தியாவிலிருந்தே சவுதி அரேபியாவுக்கு அதிக பணிப்பெண்கள் செல்கின்றனர்.

இந் நிலையில் இலங்கையுடன் சவுதி அரேபியா எதிர்வரும் ஜனவரி 14 ஆம் திகதியன்று பணிப்பெண்கள் தொடர்பான உடன்படிக்கையை செய்து கொள்ளவுள்ளது. (அ-2)

# உறுப்பினர் வெற்றிடம் நிரப்பப்பட்டது

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர் தியாகராஜாவின் மறைவையடுத்து அவரின் வெற்றிடத்தை நிரப்பும் வகையில் கந்தன் இராசதுரை பிரதேசசபை உறுப்பினராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சார்ந்த வயிரன் தியாகராஜா கடந்த 16.08.2013 அன்று விபத்தில் மரணமானதையடுத்து அவரின் வெற்றிடத்தை நிவர்த்தி செய்யும் வகையில் உள்ளூராட்சி அதிகார சபைகளின் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 65அ(2) எனும் பிரிவின் கீழ் அவர் சேர்ந்திருந்த ஈழ மக்கள் ஜனநாயக கட்சியைச் சார்ந்த கந்தன் இராசதுரை நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை ஈபிடிபியின் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் வழங்கினார். (அ)

# முதல்வாரத்தில் சூரிய கிரகணம்

ஜனவரி மாதம் முதல் வாரத்தில் சூரிய கிரகணம் ஏற்படும் என வானியல் ஆய்வாளர் அனுர சி. பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு மிக நெருக்கமாக தற்போது சூரியன் பயணிப்பதனால் சூரிய கிரகணத்தை விரைவில் எதிர்பார்க்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இச்சூரியக் கிரகணமானது உலக கால நிலையில் மாற்றங் களை ஏற்படுத்துமென்பதுவதுடன் பூமியின் ஒரு பகுதி மழையுடன் கூடிய காலநிலையையும் மற்றைய பகுதி வறட்சியுடன் கூடிய கால நிலையையும் கொண்டதாக இருக்குமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்வரும் 14, 15 ஆகிய தினங்களில் ஐசோன் விண்கற்கள் சூரியனுக்கு நெருக்கமாக பயணிப்பதனால் விண்கற்கள் வெடித்து எஞ்சிய பகுதியை தாங்கக்கூடிய நிலையும் உருவாகுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# யாழ்ப்பாணம் மாநகர சபை ஆதனவரி அறிவித்தல்-2014

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் படி யாழ்ப்பாணம் மாநகர சபை பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளமை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

01. மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம், 247 ஆம் பிரிவுகளின் பிரகாரம், நேர்முன் ஆண்டான 2013 ஆம் ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டை குறிப்பிடப்பட்ட விடயங்களில் அவசியமெனக் கருதப்படக்கூடியதாக அத்தகைய திருத்தங்களுடன் 2014 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடாக அல்லது ஆதனவரி மதிப்பீடாக கைக்கொள்ளுதல்.

02. அடுத்துத் திருத்தியபடியான முற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் நியதிப்படி யாழ்ப்பாணம் மாநகர சபைப் பரிபால்ன எல்லைக்குட்படும் சகல வீடுகள் ஒவ்வொரு விபரணத்தையும் கொண்ட கட்டடங்கள், சகல காணிகள், குடிமனைகள் எதனதும் வருடாந்தப் பெறுமதியின் மீது 2014 ஆம் ஆண்டிற்குப் பின்வரும் வீதங்களை உண்டு பண்ணவும் விதிக்கவும்.

(அ) மாநகர சபைப் பரிபாலன எல்லைக்குட்படும் வட்டாரம் 01 முதல் 23 வரைக்கும் உள்ள சகல வட்டாரங்களிலும் ஆறுசத வீதத்திலான (06%) ஒரு விகிதம்

03. (அ). மேற் கூறப்பட்ட வீதவரிப் பணங்கள் யாவையும் நான்கு சம கந்தாய தவணைகளில் ஆண்டு முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்டெம்பர் 30, டிசெம்பர் 31 ஆம் திகதிகளன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) 2014 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த வீத வரி முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு 10% (பத்து சதவீதம்) கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வீத வரி வருமதியாக உள்ள அந்தக் கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாயவரி செலுத்தப்பட்டால் ஒரு 05% (ஐந்து சதவீதம்) கழிவு அனுமதிக்கப்படும்.

04.மேற்கூறப்பட்ட பந்தி 3 (அ) இல் குறிப்பிடப்பட்ட உரிய திகதிகளிற்கு முன்பு குறித்த வீத வரிகளைச் செலுத்தாதவிடத்து வெறும் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% (பதினைந்து சதவீதம்) இலும் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20% (இருபது சத வீதம்) இலுமான விறாந்துச் செலவு அறவிடப்படும்.

05.2014 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கிடைக்காதவர்கள் மாநகர ஆதனவரிப் பகுதியில் நேரடியாக சமுகமளித்து ஆதனவரி அறிவித்தலை பெற்றுக் கொள்வதுடன் 2014 ஆம் ஆண்டு ஆதனவரியினைத் தாமதமின்றிச் செலுத்த முடியும்.

திருமதி.யோகேஸ்வரி பற்குணராசா
முதல்வர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
2013.12.30

(சி/6034)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

கோப்பாய் முருகன் கோவில் பிரதான வீதிக்கு சமீபமாக வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

தொ.பே.:- 0776758131, 0776740836

(5202)


# இந்தியா- இலங்கை இடையே மீனவர்கள் பரஸ்பர மாற்றம்

(சென்னை)

இந்தியா மற்றும் இலங்கை இடையே பரஸ்பர பரிமாற்றமாக 18 மீனவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று இலங்கை கடற்படை செய்தி தொடர்பாளர் கோசல வர்ணாகுலசூரியா கூறியுள்ளார்.

அதன்படி இலங்கை சிறையில் உள்ள 6 இந்திய மீனவர்களும், 2 படகுகளும் காங்கேசன்துறை கடற்கரை நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அதேபோல 12 இலங்கை மீனவர்களும் 2 படகுகளும் இந்தியாவில் இருந்து விடுவிக்கப்படுவார்கள்.

அவர்களை இந்திய கடலோர காவல் படையினர் கொண்டுவந்து ஒப்படைக்கிறார்கள்.

இந்த பரஸ்பர விடுதலை எப்போது நடைபெறும் என்பதை உடனே தெரிவிக்க முடியாது.

இலங்கை கடற்படையின் எச்சரிக்கையையும் மீறி, இந்திய மீனவர்கள் தொடர்ந்து சர்வதேச கடல் எல்லையை தாண்டி வந்து, தங்கள் எல்லையில் மீன் பிடிக்கிறார்கள் என்று அவர் கூறினார்.

(அ-2)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
03.11.1948

மறைவு
28.12.2013



அமரர் இராசையா நித்தியானந்தன்
(கிராம அலுவலர் J/141)
பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்

சேவையின் நாயகனாய், பண்பின் உறைவிடமாய், ஏழைகளின் தோழனாய், சக உத்தியோகத்தரின் சகோதரனாய், தரணியில் நின்புகழ் நிலைக்க அன்புடன் வாழ்ந்து, பிரிவு உபசாரத்தின் போது பிரிய முடியாது எம்மை விட்டுப் பிரிந்து சென்றது ஏனோ? உம் ஆத்மா என்றும் இறை பாதத்தில் நித்திய ஆனந்தமடைய பிரார்த்திப்பதோடு குடும்பத்தினருக்கும் எனது அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(5203)

கு.கணேசதாசன்
விவாகப் பிறப்பு இறப்புப் பதிவாளர், வலி.மேற்கு, மானிப்பாய்.



## வடமராட்சி மணல் ஏற்றும் வாகன உரிமையாளர் கூ.ச.

அறிவித்தல்

**வடமராட்சி மணல் ஏற்றும் வாகன உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் மீள்பரிசீலனை செய்தல்.**

எமது சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான மணல் விநியோகம் தொடர்பாக யாழ். அரச அதிபரின் கூற்றுக்கிணங்க எமது சங்கத்திற்குள் பதிவு செய்யப்பட்ட வாகனங்களை மீள் ஆய்வு செய்யவுள்ளோம்.

அவையாவன:

01. உழவு இயந்திரங்கள்

02. கன்ரர் ரக வா்கனங்கள் (2 1/4 கீப்புக்குட்பட்டவை)

மேற்குறித்த வாகனத்தை வைத்திருக்கும் அங்கத்தவர்கள் உடனடியாக சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். பாரவூர்திகள் பதிவு செய்யப்படமாட்டாது என்பதையும் அறியத் தருகின்றோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
தர்மிகா கட்டடப் பொருள் விற்பனை நிலையம்,
திக்கம் றோட், அல்வாய்.

(சி/6042)



## NORTH CEYLON ORIENTAL MUSIC SOCIETY
## வட இலங்கைச் சங்கீத சபை

**வட இலங்கைச் சங்கீத சபையினால் நடத்தப்படும் கலை வகுப்புக்கள்**

வட இலங்கைச் சங்கீத சபையினால் ஜனவரி மாதம் முதல் தரம் 1 தொடக்கம் தரம் 6 வரை சங்கீதம், வாத்தியங்கள், பரதம், பண்ணிசை, மிருதங்கம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கு குறைந்த கட்டணத்துடன் வகுப்புக்கள் மருதனார் மடத்தில் உள்ள வட இலங்கைச் சங்கீத சபை கலை கலாசார மண்டபத்தில் நடாத்த இருப்பதால் பங்கு பற்ற விரும்பும் பயிலுநர்கள் அதற்குரிய படிவத்தை காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தி 06.01.2014 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்கவும்.

எஸ்.சிவராஜன்
செயலாளர்,
வட.இ.ச.சபை.

(சி/6043)



## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கிளிநொச்சி

**2014 ஆம் ஆண்டிற்கான வாகன சுத்திகரிப்பு சேவை வழங்கல்**

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் சேவையில் ஈடுபட்டுள்ள வாகனங்களுக்கான சுத்திகரிப்பு சேவைக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

1. 2014 ஆம் ஆண்டிற்கான சுத்திகரிப்பு சேவைக்கான இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 03.01.2014 தொடக்கம் 10.01.2014 வரை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும்.

2. அரசாங்க ஒப்பந்தத்தை செய்ய முடியாதவாறு தடை செய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

3. விண்ணப்பிக்கத் தகுதியானோர் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக 1000 ரூபாவும் மீளளிக்கக்கூடிய வைப்புத் தொகையாக 30000 ரூபாவையும் எமது பணிமனையில் செலுத்தி கேள்வி ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும். கேள்விப் பத்திரங்களை 13.01.2014 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தலைவர், கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்விப் பெட்டியிலோ இட முடியும். அதே திகதியில் பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும்.

4. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது விண்ணப்பதாரரோ அல்லது எழுத்துமூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ நேரில் சமுகமளிக்கலாம்.

5. கேள்வி தொடர்பான கேள்விச் சபையின் தீர்மானமே இறுதியானதாகும்.

6. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Dr. ப.கார்த்திகேயன்
தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
பி.சு.சே.ப.பணிமனை,
கிளிநொச்சி.

(சி/6040)



## THE ASSOCIATION FOR THE HEALTH & COUNSELLING 'SHANTHIHAM'

**Registration of Suppliers for Goods and Services for the year 2014**

Application are invited from reputed Supplier, Manufacturers, Importing agents, other business Organizations, Contractors who wish register themselves with the Association for health and Counseling " Shanthiham" for supply of goods and services listed below for the year 2014.

**Conditions:-**

- Applicants should pay Rs.250/- as registration fee by way of Cash or Bank draft and obtain application Forms during office hours from finance Branch.
- Seperate application should be forwarded for each category.
- Completed Application forms should be forwarded under registered cover or by hand to the following Address on or before 3.30 p.m. 31.01.2014 and marked on the left hand corner of the envelop as " Registration of Suppliers"
- Quotation of supply of goods and services will normally be called from the list of registered.suppliers.
- However the ACH- "Shanthiham" reserves the right to invite Quotations from non registered Suppliers also if necessary.
- The AHC "Shanthiham"reserves the Right to accept or reject any application sent for registration.
- Applications could be obtained on or before 3.30 pm 30.01.2014.

| Supplies | Services |
|---|---|
| 1.Computer equipments Laptop, Desktop,Printer Software and hardware UPS etc; | 1.Hire of Cars, Vans motor coaches Double Cab etc; |
| 2.Office Equipments Fax, Photo Copier calculator etc; | 2.Printing work |
| 3.Training Equipments Multimedia, Overhead Projector, Digital Video Camera etc; | 3.Servicing and repir Computer items |
| 4.Electrical items and accessories | 4.Repir and Maintenance of office equipments |
| 5.Office Furniture Timper/ Steel | 5.Building repairs and maintenance works |
| 6.All types of Stationery items | 6.Security services |
| | 7.Janitorial services |
| | 8.Psychology consultancy services |
| | 9.Book binding ane repair services |
| | 10.Information Technology services hardware and software services Accounting Packages etc; |
| | 11.Vehicle repair including Tinkering and Spray Painting works |

**Address: The Association for Health And Counselling**

President
AHC- "Shanthiham

"Shanthiham"
8/1, Katpakavinayagar Lane
Off Kachcheri Nallur Road, Jaffna



## சேவைநலன் பாராட்டு

தாயாம் தமிழைக் கற்பித்தாய்
தாய்போல் மனதால் நேசித்தாய்
தாயின் இதயம் கொண்டே பிள்ளை
தரத்தில் உயர உழைத்திட்டாய்
வெற்றி பெற்றே மாணவரெல்லாம்
வாழ்ந்திட வேண்டிப்பாடுபட்டாய்
கற்ற பாடம் நெஞ்சோடு கேட்ட
நற்சொல் அறிவோடு
உற்றார் போல உறவாகி
உள்ளம் அன்பு பாராட்டி
நன்றாய் ஓய்விற் பிரிகின்றாய்
நலங்கள் கோடி பெறுவாயே!

யாழ். நல்லூர் மங்கயற்கரசி வித்தியாலயத்தில் தமிழ் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெறும் எமது தமிழ் பாட ஆசிரியர் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.



திருமதி சுந்தரராசா இராஜராஜேஸ்வரி அவர்களின்

வாழ்த்துவோர்:-
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யாழ்/ மங்கையற்கரசி வித்தியாலயம்.

(5200)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

677


## ஆமையும் வாத்தும்

ஒரு ஏரியில் சம்புக்ரீவன் என்றொரு ஆமை இருந்தது. அதன் சிநேகிதர்களாக சங்கடகன், விகடன் என்று இரண்டு வாத்துக்கள் இருந்தன. ஏதோ கால வித்தியாசத்தால் பன்னிரண்டு வருடகாலம் மழை தவறிப்போய் நீர் வறட்சி ஏற்பட்டுவிட்டது. இந்த நிலைமையில் வாத்துக்கள் இரண்டும் யோசிக்கத்தொடங்கின. ஒரு யோசனை தோன்றியது. 'இந்த ஏரியில் நீர் வற்றி விட்டது. வேறு ஏதாவது ஏரி, குளம் பார்த்துக்கொண்டு போகவேண்டியது தான். நண்பன் சம்புக்ரீவனிடம் விடை பெற்றுக்கொண்டு போய்விடலாம்' என்று தீர்மானித்தன.

அவ்விதமே ஆமையிடம் போய் விடயத்தைச் சொல்லின. அதைக் கேட்டதும், "ஆமை என்னை விட்டு விட்டு நீங்கள் மட்டும் போய்விடுவதற்கு எப்படி உங்களுக்கு மனம் வருகிறது? நானே நீரில் வசிக்கிறவன். நீர் வற்றிப்போவதாலும் உங்கள் பிரிவாற்றாமையாலும் நான் சீக்கிரம் இறந்துவிடுவேன். என்மேல் உங்களுக்கு கொஞ்சமாவது அன்பு இருக்குமானால், என்னை சாவிலிருந்து காக்க வேண்டும். ஏரியில் நீர் வற்றிப்போனால் உங்களுக்கு சாப்பாடுதான் குறையும். எனக்கோ உயிரே போய்விடும். சாப்பாடு குறைவது கொடுமையா? பிராணனை விடுவது கொடுமையா? நீங்களே யோசித்துச் சொல்லுங்கள்" என்றது.

"உனக்கு இறக்கைகள் கிடையாது. நீ நீரில் வசிக்கிறவன். உன்னை அழைத்துப்போக எங்களால் முடியாதே!" என்று வாத்துக்கள் பதில் தந்தன.

"அதற்கு ஒரு உபாயம் செய்யலாம். ஒரு குச்சியைக் கொண்டு வாருங்கள்" என்றது ஆமை. வாத்துக்கள் போய் குச்சியொன்று கொண்டுவந்தன. அந்தக் குச்சியின் நடுப்பாகத்தை ஆமை தன் பற்களால் கவ்விப்பிடித்துக் கொண்டு பேசத்தொடங்கியது:



"இந்தக் குச்சியை உங்கள் அலகு களில் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மேலே பறந்து செல்லுங்கள். வேறு ஏதாவது ஏரி, குளம் கண்ணுக்குத் தெரிகிற வரையில் சமவேகத்தில் பறந்து போய்க் கொண்டேயிருங்கள்" என்று சொல்லிற்று.

"அந்த உபாயத்தில் ஒரு அபாயம் இருக்கிறது. எப்பொழுதாவது நீ கொஞ்சம் வாய் திறந்தால் போதும். குச்சியின் மீதுள்ள பிடி விட்டுப் போய் உயரத்திலிருந்து கீழே விழுந்து தூள் துளாகி விடுவாய் என்று வாத்துக்கள் ஆட்சேபித்தன.

"அப்படியானால், இந்த விநாடிமுதல் நான் மௌன விரதம் அனுஷ்டிக்கிறேன். ஆகாயத்தில் பறந்துகொண்டிருக்கும் வரை ஒன்றும் பேச மாட்டேன்" என்றது ஆமை.

வாத்துக்கள் அப்படியே செய்தன. ரொம்பவும் சிரமப்பட்டு ஏரியை விட்டு மேலே எழும்பி அருகிலிருந்த பட்டணத்தின்மேல் பறந்து சென்றன. கீழேயிருக்கும் நகர ஜனங்கள் மேலே போகிற ஆமையைப் பார்த்துவிட்டார்கள். "என்ன இது? வண்டி இழுப்பதுபோல எதையோ இழுத்துக் கொண்டு பறவைகள் பறக்கின்றனவே!" என்று அவர்களிடையே பேச்சும் சலசலப்பும் எழுந்தது.

அந்தப்பேச்சு ஆமையின் காதில் விழுந்தது. அதற்குச் சாவு சமீபித்து விட்டது. கவனமில்லாமல் ஆமை "இந்த ஜனங்கள் என்ன உளறுகிறார்கள்?" என்று வாய் திறந்துபேசிற்று. அவ் வளவுதான். அந்த விநாடியே அந்த முட்டாள் ஆமை குச்சியை விட்டு நழுவி தரையில் விழுந்தது. இறைச்சி விரும்புகிற ஜனங்கள் அதை உடனே கூரான கத்தி கொண்டு கண்டந்துண்டமாக வெட்டித் தீர்த்துவிட்டார்கள்.

"அதனால்தான் தனக்கு நன்மை செய்யும் சிநேகிதர்களின் பேச்சைக் கேளாதவன்.... என்றெல்லாம் சொல்கிறேன்" என்றது பெண் குருவி. அது மேலும் தொடர்ந்து பேசுகையில்,

"வருமுன் காப்போனும், சமயோசித புத்தியுடையவனும் சுகம் பெறுவார்கள். விதியை நொந்துகொள்கிறவன் நாசமடைகிறான்" என்றது.

"அது எப்படி?" என்று ஆண் குருவி கேட்கவே, பெண்குருவி சொல்லத் தொடங்கியது.....

(தொடரும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

01.2014
02

- 1492-ஸ்பெயினில் முஸ்லிம்களின் ஆளுகைக்குட்பட்ட கடைசி நகரமான கிரனாடா சரணடைந்தது.
- 1757 - கல்கத்தாவை ஐக்கிய இராச்சியம் கைப் பற்றியது.
- 1782 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி அட்மிரல் எட்வெர்ட் ஹியூஸ் தலைமையில் இந்தியாவில் இருந்து திருகோணமலை நோக்கிப் புறப் பட்டது.
- 1793 - ரஷ்யாவும் புருசியாவும் போலந்தை பங்கிட் டன.
- 1893 - வட அமெரிக்காவில் தொடருந்துப் பாதைகளில் நேரத்தை அளவிடும் குரோனோமீட்டர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- 1905-ரஷ்யக் கடற்படையினர் சீனாவின் போர்ட் ஆதரில் ஜப்பானியரிடம் சரணடைந்தனர்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: வேல்ஸில் கார்டிஃப் என்ற இடத்தில் லாண்டாஃப் தேவாலய ஜேர் மனியரின் குண்டுவீச்சில் பலத்த சேதம் அடைந்தது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: மணிலா ஜப்பானியரினால் கைப்பற்றப்பட்டது.
- 1954 - பத்மசிறீ, பத்மபூசன், பத்மவிபூசன் விருதுகள் இந்திய அரசினால் ஏற்படுத்தப்பட்டது.
- 1955 - பனாமாவின் அதிபர் ஜோசே அன்ரோனியோ ரெமோன் படுகொலை செய்யப்பட்டார்.
- 1959 - முதலாவது செயற்கைச் செய்மதி, லூனா 1, சோவியத் ஒன்றியத்தால் விண்ணுக்கு ஏவப் பட்டது.
- 1982 - சோமாலிய அரசுக்கு எதிரான தமது முதலாவது இராணுவ நடவடிக்கையை சோமாலிய தேசிய இயக்கம் தொடங்கியது. சோமாலியாவின் வடபகுதியில் அரசியல் கைதிகளை விடுவித்தனர்.
- 1993 - யாழ்ப்பாணம், கிளாலி நீரேரியில் 50க்கும் மேற்பட்ட பயணிகள் இலங்கைப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2006 - மன்னாரில் இலுப்பைக்கடவையில் இடம்பெற்ற இலங்கைப் படையினரின் வான் தாக்குதலில் 8 சிறுவர்கள் உட்பட 15 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 40 பேர் படுகாயமடைந்தனர்.
- 2008 - விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே 2002 இல் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து வெளியேறுவதாக இலங்கை அரசு அறிவித்தது.


பிறப்பு

- 1940 - எஸ். ஆர். ஶ்ரீனிவாச வரதன், ஏபெல் பரிசு பெற்ற கணிதவியலாளர்.

இறப்புகள்

- 1782 - கீர்த்திஶ்ரீ ராஜசிங்கன் - இலங்கையின் கண்டியை ஆண்ட கடைசி அரசன்.
- 1876 - மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தமிழறிஞர் (பி.1815)
- 1960 - தி.வை.சதாசிவ பண்டாரத்தார், தமிழக வரலாற்று அறிஞர் (பி.1892)

### ஏபெல் பரிசு பெற்ற தமிழ்ப் பேராசிரியர் எஸ்.ஆர்.ஶ்ரீநிவாச வரதன்



சாத்தமங்கலம் ரங்க ஐயங்கார ஶ்ரீநிவாச வரதன், கணிதத்திலும் புள்ளியியலிலும் நிகழ தகவுக் கோட்பாட்டில் தற்காலத்தில் சறப்பு பெற்று மதிப்புமிக்க ஏபெல பரிசை, 2007ம ஆண்டுக்காகப் பெற்ற, கணிதவியலர். அமெரிக்காவின் உச்ச உயர்வுப் பதக்கமான தேசிய அறிவியல் பதக்கத்தை 2010 ஆம் ஆண்டு பராக் ஒபாமா இவருக்கு அளித்தார். 2013 ஆண்டுக்கான இன்ஃபோசிசு பரிசையும் வென்றார்.

இவர் இந்தியாவில் சென்னையில் 1940 ஆம் ஆண்டு ஜனவரி மாதம 2ஆம் திகதி பிறந்தவர். இவருடைய தந்தையார் அரங்க ஐயங்கார். அவர் ஒரு தலைமை ஆசிரியர்.

பரதன் 1959 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சிறப்புபட்டம் பெற்று அடுத்த ஆண்டு முதுமானி பட்டமும் பெற்றார்.

பின்னர் கொல்கத்தா இந்தியப் புள்ளியியல் கழகத்தில், புகழ்பெற்ற புள்ளியியலர் சி.ஆர்.ராவின் தலைமையின்கீழ் ஆய்வுசெய்து 1963 இல முனைவர் பட்டம் பெற்றார். முதுமுனைவர்ப் பேராளராக கூராண்ட்டு கணிதவியல் கழகத்தில் 1963 இலிருந்து 1966 வரையில் பணியாற்றினார். 1966 இல் அங்கு துணைப் பேராசிரியருமானார். 1968 இல் இணைப்பேராசிரியரானார். 1972 இல் முழுப்பேராசிரியராக பணியேற்றம் பெற்று, 1980 இலிருந்து 1984 வரையும் மறுபடியும் 1992 இலிருந்து 1994 வரையிலும் அக்கழகத்திற்கு இயக்குனராகப் பணியாற்றும் பேறும் பெற்றார்.

#### ஏபெல் பரிசு

நோர்வே தேசத்து அறிவியல் கழகம் 2003 இலிருந்து நோர்வே நாட்டின் 19-வது நூற்றாண்டின் சிறந்த கணித இயலராகவும் உலகக்கணித மேதைகளில் ஒருவராகவும் திகழ்ந்த ஏபெல் என்பவரின் நினைவில் ஏற்படுத்தப்பட்ட ஏபெல் பரிசை வழங்கி வருகின்றனர். இப்பரிசின் மதிப்பு இன்று $ 875.000 அமெரிக்க டொலர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஸ்ணா ஒரு ரோல் மாடல்!



**ஆன்மீகம் 81**

...சத்குரு: நீலியும் மூக்கை உறிஞ்சிய படி, "கம்புச்சண்டையில் போய்விட்டார்," என்று கூறினாள்.

"என்னது? கம்புச்சண்டையிலா?" திகைத்துப்போய் முதலாளி பின்னால் சரிந்தார்.

அன்பு நிறை சூழல், ஆனந்தம் நிறை சூழல், பயங்கரமான சூழல் என்று எந்த நிலையில் இருந்தாலும் முகத்தில் மாறாத புன்னகை இருந்து கொண்டே இருந்தது!

சற்று நேரம் கழித்து நீலியின் மாமா ஒருவர் வந்தார். "அடடே! போன மாதம் கூடப் பார்த்தேனே. நன்றாகத்தானே இருந் தான்! உன் புருஷன் எப்படி இறந்து போனான்?" என்று கேட்டார்.

"கம்புச் சண்டையில்" என்று நீலி சொன்னவுடன் அவளது மாமாவும் திகைத துப் போய்ச் சரிந்தார்.

கருப்புசாமியின் அக்கா வந்தாள். "தம்பி எப்படி இறந்தான்?" என்று கேட்டாள.

"கம்புச் சண்டையில்" என்று மற்றவரகளிடம் கூறியது போலவே அவளிடமும் கூறினாள் நீலி.

"ஏய்! ஏன் இப்படி அபாண்டமாகச் சொல் கிறாய்? தம்பி காலரா கண்டுதான் போனான் என்று உனக்குத் தெரியும்தானே? கம்புச் சண்டையில் போனான் என்கிறாயே! இது உனக்கே அடுக்குமா?"

"அடியேய்! என் புருஷன் கழிசடையாகவே இருந்து, கழிசலிலேயே போய்ச் சேர்ந்தான் என்ற உண்மையைக் காட்டிலும், 'அந்த ஆள் ஏதோ ஓடி, ஆடி கம்புச் சண்டை போட்டாவது போய்ச் சேர்ந்தான்' என்று ஊர் நினைத்துக்கொள்ளட்டுமே" என்று ஆத்திரத்துடன் கத்தித் தீர்த்தாள் கருப்பு சாமியின் பெண்டாட்டி!

நீங்கள் கருப்புசாமி மாதிரி வாழவும் வேண்டாம். அவரைப்போல் சாகவும் வேண டாம். ஆனந்தமான கணங்களை அறிந்து கொள்ளாமல் இருப்பது மனித வர்க்கத்



துக்கே எதிரான ஒரு குற்றம். ஆனந்தமாக, அன்பாக இருப்பது அப்படி ஒன்றும் இயலாத செயலும் இல்லை! கைக்கெட்டாத அபூர்வமான அதிசயமும் அல்ல!

கிருஷ்ணன் தன் வாழ்நாள் முழுக்கக் கொண்டாட்டமும் கோலாகலமுமாக இருந் தான் சுற்றி என்ன நிகழ்ந்தாலும் அவறறால் பாதிக்கப்படாமல் துள்ளித் திரிந்தான் இடர்கள் நிறைந்த அவனது வாழ்க்கை சினனஞ்சிறு பருவத்திலேயே எவ்வளவோ மோசமான சூழ்நிலைகளைச் சந்தித்தது. பிறந்த தருணம் முதற்கொண்டே அவனைக கொல்ல முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டன. அவனைக் கொல்வதற்கு எண்ணிலடங்கா கொலைகாரர்கள் வந்தார்கள். ஆயினும் பல்வேறு முறைகளில் அவன் உயிர் பிழைத துக் கொண்டான்.

முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்தக்கொலை முயற்சிகளின்போதும் கூட அவன நடனம், மகிழ்ச்சி, ஆனந்தம், அன்பு ஆகியவற்றின் கலவையாகத்தான் இருந்தான்!

போர்க்களத்தில், எதிரியின் தலையைச் சீவுகின்ற தருணத்தில் இருந்தாலும் அவன் இதழ்களில் புன்னகை!

அன்பு நிறை சூழல், ஆனந்தம் நிறை சூழல், பயங்கரமானசூழல் என்று எந்த நிலையில் இருந்தாலும் முகத்தில் மாறாத புன்னகை இருந்துகொணடே இருந்தது! தேவையான சந்தர்ப்பங்களில் கடுமையானவனாக மாறத்தான் செய்தான். தேவை ஒழிந்த மறுகணமே, அவன் இதழ்களில் மறுபடி புன்னகை! ஆனந் தம்!

பயங்கரமான அத்தனை தருணங்களையும் சிரித்தபடியே எதிர்கொண்டான். புன்னகையுடனேயே சந்தித்தான். துரதிருஷ்டவசமாக மக்கள் இதை ஒரு தெய்வீகக் குணமாகக் காணத்தொடங்கிவிட்டார்கள்.


**புன்னகை என்பது தெய்வீகம் அன்று. மனிதனின் இயல்பு! மனிதனுக்கே உரியகுணம். ஆனால் இன்று? மக்கள் புன்னகையை ஒரேயடியாக இழந்து விட்டார்கள். அதை மூட்டை கட்டி சொர்க்கத்துக்கு அனுப்பிவிட்டார்கள். தங்களுடைய ஆனந்தத்தை எல்லாம் சொர்க்கத்துக்கு ஏற்றுமதி செய்துவிட்டார்கள்.**

**ஆனந்தமும் புன்னகையும் சொர்க்கத்தில்தான் கிட்டும் என்று தங்களைத் தானே ஏமாற்றிக்கொண்டு இருக்கிறார்கள்!** (முற்றும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



நகைச்சுவை நடிகர் தங்கவேலு


இஸ்லாம் வரலாற்றில் மூன்றாவது தலைவரான உதுமான் அவர்களிடம் 'உலகில் பெரிய பண்பு எது?' என்று கேட்டார் ஒருவர்.

'நம்மைத் தேடி வருபவர்களை உட்கார வைத்துப் பேசுவது...' என்று சொன்னார்.

இந்தச் சொல் அன்று நினைவுக்கு வந்தது.

"உங்க ஊர் பெயரை தங்கவேலு சொன்னார்... முஸ்லீம் மதத்தில் பிறந்த உங்கள் எழுத்து, தமிழுக்கு ரொம்ப சிறப்பை தருவதாக இருக்குது"ன்னு சொன்னாரு. "இவங்களும் உங்க இனம் தான். எம்.கே.முஸ்தபா, எங்க நண்பர்..." என்று அவரை அறிமுகப்படுத்தினார்கள்.

முஸ்தபா, என் பத்திரிகை வாழ்வை



எம் ஜி ஆரின் கையொப்பம்

நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார். *சுதந்திர நாடு* தின இதழில் வெளிவந்த சிறுகதைகளையும் நான் ஆசிரியராக இருந்து வெளியிட்ட *பூவிழி* பத்திரிகையைப் பற்றியும் சொன்னார்.

"முஸ்தபா சொல்லுவதைப் பார்த்தால், நீங்க ஆறு வருடத்துக்கு முன்னாலேயே நல்லா எழுதியிருக்கீங்க. இனிமேலும் பெரிய சந்தர்ப்பங்கள் வரலாம். உங்க சொந்த பெயரில் எழுதுறதைவிட, ஒரு பொதுப் பெயர்ல எழுதினா நல்லாயிருக்கும். அதனால பெயரை மாத்தி வச்சுக்குறீங்களா?" என்று கேட்டார்கள்.

"உங்க இஷ்டம். மாத்தி வைங்க" என்றேன்.

"உங்களுக்கு எந்த ஆசிரியரைப் பிடிக்கும்? பெரியவங்களா இருக்கணும்..."

"ரவீந்திரநாத் தாகூரை எனக்குப் பிடிக்கும். அவுங்க கதை, கவிதைங்க நிறைய படிச்சிருக்கிறேன்" என்றேன்.

"சரி, அவர் ரவீந்திரநாத் தாகூர். நீங்க, தாகூர்" என்றார்கள்.

பெரியவர். "நாத் வேண்டாம். உங்க பேரை ரவீந்திரன்னு வச்சுங்குங்க" என்றார்.

"சரி" என்றேன்.

அப்போது செம்மல் ஏதோ மனக் கணக்குப்போட்டு. "அதுகூட வேணாம். புனைப் பெயராத் தெரியணும். அதனால ரவீந்தர் அப்படிப் பார்த்தா நியூமராலஜிபடி ஆறுவரும். கலைக்கு நல்லது" என்றார்கள்.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் முடிசூட்டிக் கொண்ட நாளில் எனக்கு புதுப்பெயர் சூட்டப்பட்டது- பொன்மனச்செம்மலின் பொன்வாயால்!

## இன்பக் கனவு

பெரியவர் "சரி- இனிமேல் உமக்கு எல்லாம் வரும். போய்ட்டு நாளைக்கு வாரும். கார் அனுப்பறோம்" என்று என்னை அனுப்பினார்கள்.

காஜா மொய்தீனாக உள்ளே போய் ரவீந்தராக வெளியே வந்தேன்.

இன்பக் கனவு

ஷாஜஹான் மன்னனிடம் மாபெரும் கவிஞரான மிர்ஸா காலிப் இருந்தார். இருவரும் நண்பர்கள்.

காலிப் கவிதைகளை மெச்சிய பல பெரியவர்கள், "அவரது மையின் கசிவு, உயிர்களின் உணர்வு" என்று சொன்



னார்கள்.

"எப்படி இவ்வளவு உயர்வாக எழுது கிறீர்கள்?" என்று கேட்டதற்கு "என் கவிதைகள் பிறப்பது மையின் கசிவினால் அல்ல. அவைகள் பசியின் கசிவு" என்று சொன்னார் மிர்ஸா காலிப்.

அப்படி எனக்கும் ஒரு நிகழ்ச்சி நடந்தது. இரண்டாம் நாள், லாயிட்ஸ் வீதியில் அமைந்த தாய் வீட்டிற்குச் சென்றபோது, அங்கிருந்த சபாபதி, எனக்கு இருக்கை கொடுத்து காப்பியும் கொடுத்தார்.

மூன்றுவேளை பட்டினிக்குப் பிறகு அந்த காப்பி உயிருக்கு அசைவு கொடுத்தது. உள்ளத்துக்குத் தெம்பைக் கொடுத்தது.

கொஞ்ச நேரம் கழித்துப் பெரியவர் வந்து... "உங்களை சோதிக்கவில்லை, இருந்தாலும் உங்கள் எழுத்து நடை எப்படி இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள ஆசை, அதனால், இந்தக் காட்சிக்கு வசனம் எழுதிக் கொடுங்கள்..." என்று சொல்லி ஒரு தாளைக் கொடுத்தார்.

வாங்கிப்பார்த்தேன்; திகைத்தேன். விதி என்பதை உணர்ந்தேன்.

காரணம், அவர்கள் கொடுத்த காட்சியில் ஒரு தாய் குழந்தைகளுடன் மூன்று நாள் பட்டினி கிடந்து, தெய்வத்திடம் முறையிடும் நிகழ்ச்சியாக இருந்தது.

நான், அண்ணன் தம்பி இருவரையும் என் தெய்வமாகவே நினைத்தேன்.

அந்த நாடகக் காட்சிக்கு வசனம் எழுதினேன். அந்தக் காட்சி ஹாஸ்யமாகவோ, காதலாகவோ இருந்திருந்தால், அந்தநேரத்தில் என்னால், சரியாக எழுதியிருக்க முடியாது.

பகல் நேரம் சின்னவர் வந்து என்னிடம் ஐந்து ரூபாய் கொடுத்தார். பக்கத்து ஹோட்டலில் சாப்பிட்டு வரும்படி சொன்னார். அந்நாளில் அமீன் ஹோட்டலில் ஒருவேளை சாப்பாடு ஆறு-அணா. சாப்பிட்டுவிட்டு வந்து மீதிப்பணத்தை அவர்களிடம் கொடுத்தபோது அதை திரும்ப அவர், வாங்கவில்லை....

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி - ஒரு பன்முகப் பார்வை

(சென்றவார தொடர்ச்சி)

குடித்தொகையின் செயற்பாட்டில் விளைந்த இவ்வுற்பத்திகளில் அக, புறக்காரணிகளால் தூண்டப்பட்ட கற்றோரால் படைக்கப்பட்ட புத்தாக்கங்கள், சிந்தனைகள், விநோதக் கற்பனைகள் என்பனவே இலக்கியங்களாகவும் தத்துவங்களாகவும் அம்மொழிச் சமூகத்தின் பெருமைக்குரிய பெறுமதிமிக்க பொக்கிஷங்களாகவும் பரம்பரை பரம்பரையாகக் கடத்தப்பட்டு வருகின்றன.

ஒரு சமூகமானது பெருமைப்பட்டுக் கொள்ளும் விஞ்ஞான, கலை சார்ந்த உயர் சிந்தனைகளும் புத்தாக்கங்களும் மொழி மூலமாகவே முன்னெடுக்கப்பட்டு வளர்ச்சியடைகின்றன.

எனவே, மொழியானது கலாசாரம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துவதாக மட்டும் அமைந்து விடாமல் அதனை பரப்பும் காரணியாகவும் அமைந்துவிடுகிறது.

இதனால்தான் கலாசார வளர்ச்சிகளுக்கும் தொடர்புகளுக்கும் சொந்த மொழியின் அறிவு மட்டுமல்லாமல் ஏனைய மொழிகளின் அறிவும் தேவைப்படுவது முக்கியமான தாகின்றது.

கல்வியில் .மொழி

கல்வி விருத்தியில் மொழியினுடைய பங்கு கணிசமானதும் காத்திரமானதுமாகும். கல்வி ஊடகமாகவும் கல்வியில் முக்கிய இடத்தைப் பெறும் பாடத்துறையாகவும் மொழி



கல்வித் தரிசனம்

விளக்குகின்றது.

கல்வியை ஆழமாகவும் அகலமாகவும் எடுத்துச் செல்வதற்கு மொழி இன்றியமையாததாகும்.

மொழியென்பது ஊடகம் என்ற நிலையில் தனியே மாணவன் பெற்றுக் கொள்ளும் தகவலுக்கு வடிவம் கொடுப்பதோடு நின்று விடாமல் பெற்றுக் கொண்ட தகவலை அவன் விளங்கிக் கொள்ளவும் அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக் கூடிய வகையில் ஒழுங்காக வடிவமைக்கவும் தான் கற்றுக் கொண்டதை அவன் பிரயோகிக்கவும் அவனுக்கு வாய்ப்பளிக்கின்றது. இங்கு மொழியானது கற்றலின் கருவியாக செயற்படுகின்றது.

அத்துடன் மொழி தானே ஒரு கற்றற்பரப்பாகவும் அமைந்து விடும் உரிமையும் உடையது.

இந்நிலைமையில் மொழி இரண்டு விதமாக வகைப்படுத்தப்படுகின்றது.

1.தாய்மொழி (Mother Tongue)

2.அந்நியமொழி (Foreign Language)

தாய்மொழி என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டன.

ஆயினும் சுருக்கமாகக் குறிப்பிடுவதாயின் ஒரு பிள்ளை தன்னுடைய சுகதுக்கங்களை, கஷ்ட நஷ்டங்களை, தன்னுடைய உணர்ச்சிகளை, தேவைகளை எந்தமொழியில் இலகுவாக வெளிப்படுத்த முடிகின்றதோ அதுவே தாய்மொழி ஆகின்றது.

இங்கு தாய்மொழிக் கற்றல் என்பதும் தாய்மொழியினூடாகக் கற்றல் என்பதும் பிள்ளையிடமான சிந்தனைத் தூண்டல், தெளிவு, விருத்தி, இலகுவெளிப்பாடு, ஆளுமை விருத்தி, பண்பாட்டு விருத்தி, புரிந்துணர்வு, கலாசார பெருமிதம் கொள்ளல் எனப் பலவாறான வளர்ச்சிக்கும் போக்குகளுக்கும் வழி காண்பதாக அமைந்து விடுகின்றது.

தாய்மொழி கற்றல், தாய்மொழியினூடாகக் கற்றல்சார் பல்வேறு அனுகூலங்களும் விஞ்ஞான ரீதியிலான பல் வேறு ஆய்வுகளூடாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

இதேபோன்று அந்நிய மொழி என்று குறிப்பிடும் போது அது இரண்டாவதாக அறியப்படும் மொழி அல்லது பின் னர் அறியப்படும் மொழி எனலாம்.

இன்னும் சிறப்பாக கூறுவதாயின் ஒரு பிள்ளை தன் சொந்த மொழியினூடாகப் பெற்ற அறிவை, அனுபவத்தை மேலும் விசாலித்துக் கொள்ள உதவும் மொழி என்றும் பல்வேறு கலாசார விழுமியங்களை அறிதலுக்கும் சர்வதேச தொடர்பாடலுக்கும் உதவும் மொழி என்றும் அழுத்தம் கொடுக்கலாம்.

முடிவுரை

இத்தகைய செயற்பாடுகளினால் விசேடமாக கலாசார, கல்விச் செயற்பாடுகளினால் மொழி என்பது தனிமனிதனதும் நாட்டினதும் வாழ்க்கையில் ஒரு சர்ச்சைக்குரிய மையமாக விளங்குகின்றது.

மொழியானது பல்வேறு சமூகங்களின் வளர்ச்சியோடு மிக நெருங்கிய தொடர்பு

**கலாநிதி அனுஷ்யா சத்தியசீலன்**
சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கொண்டிருப்பதால் ஒரு மொழிக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலானது அம் மொழிக்குரிய கலாசாரத்திற்கும் அதன் வாழும் தன்மைக்கும் (Existence) அச்சுறுத்தலாக அமைந்து விடுகின்றது. இத்தகைய அச்சுறுத்தல்களின் விளைவுகளே இனங்களுக்கிடையேயான கடும் துன்பங்களுக்கும் முரண்பாடுகளுக்கும் ஒட்டு மொத்தக் குழப்பங்களுக்கும் மூலமாக அமைந்து விட்டமையை

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3,2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

பல்வேறு இனங்களின் நாடுகளின் வரலாறுகள் இன்று சுட்டி நிற்கின்றன.

முற்றும்

# அனர்த்த தணிப்பு செயற்றிட்டத்திற்கு 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டில் அனர்த்த தணிப்பு செயற்றிட்டங்கள் நடை முறைப்படுத்த 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்.மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட நாகர் கோயில் பகுதியில் சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரம் ஒன்றை அமைத்து தருமாறு நாகர் கோயில் கிழக்கு,மேற்கு மீன்பிடி சங்கங்களின் சமாச பிரதிநிதிகள் உட்பட அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதற்கு உயர் அதிகாரிகள் ஊடாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தன்னால் அப்பகுதி மக்களிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரம் ஒன்றை அமைக்க சுமார் 60 மில்லியன் ரூபாவிற்கு மேல் தேவைப்படும் எனவும் நாகர் கோயில் பகுதியில் சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரம் அமைக்கப்பட வேண்டிய தேவை அதிகமாக வுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால், சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரத்தை 2014 ஆம் ஆண்டிற்குள் அமைத்து கொடுத்து விடமுடியும் என்று உறுதிபடத் தெரிவிக்க முடியாது எனவும் அவ்வாறு முன்னர் வெளி யான தகவல் தவறு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் எதிர்காலத்தில் சுனாமி சம்பந்தமான ஆவணமாக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன்படி 2014 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்திற்கு 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ள அனர்த்த தணிப்பு செயற்றிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

இதேவேளை, சுனாமி கோபுரங்கள் 5 அமைக்கப்பட்டுள்ளன. அனர்த்தம் தணிப்பு நடவடிக்கைகளுக்காக ஏற்கனவே ரூபா 100 மில்லியனுக்கு மேல் செலவு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் 2013 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் 20 இற்கும் மேற்பட்ட இடங்களில் சுனாமி ஒத்திகையும் விழிப்பூட்டல் நிகழ்வும் இடம் பெற்றதாகவும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட உடுத்துறையில் கடந்த தை மாதம் 24 ஆம் திகதி கடந்த வருடத்திற்கான முதலாவது சுனாமி ஒத்திகையும் விழிப்பூட்டல் நிகழ்வும் இடம் பெற்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் 50 பேரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இம் மீனவர்கள் அனைவரும் கடந்த நவம்பர் மாதம் 20ஆம் திகதி காங்கேசன்துறை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மேற்படி 50 மீனவர்களும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந் நிலையில் மீண்டும் நேற்று முன்தினம் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது குறித்த 50 மீனவர்களையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# இந்திய மீனவர்களை விடுவிக்க முயற்சித்து வருகின்றோம்

## அமைச்சர் அந்தோனி தெரிவிப்பு



(சென்னை)

இலங்கை சிறையில் உள்ள அனைத்து இந்திய மீனவர்களையும் விடுவிக்க நாங்கள் முயற்சிகள் எடுத்து வருகிறோம். என இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி தெரிவித்துள்ளார்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்து, இலங்கை சிறைகளில் அடைத்துள்ளது.

200இற்கும் மேற்பட்டோர் இது போல் இலங்கை சிறைகளில் வாடுகிறார்கள். அவர்களது படகுகளும் இலங்கையால் சிறைபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2 நாட்களில் மட்டும் 40இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந் நிலையில், கொச்சி வந்த பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி கூறும்போது,

தமிழக அரசியல் தலைவர்கள், மீனவர் பிரதிநிதிகள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை சிறையிலுள்ள அனைத்து இந்திய மீனவர்களையும் விடுவிக்க நாங்கள் முயற்சிகள் எடுத்து வருகிறோம்.

வெளியுறவுத்துறை அமைச்சகம் மூலம் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், இதற்கு ஒரு நிரந்தர தீர்வுகாணவும் முயற்சி மேற்கொளளப்பட்டுள்ளது என்றார்.(அ-2)

# சடலங்களை உரிமை கோருக

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் மாதவன் என்கின்ற முகவரி தெரியாத 40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் 28.11.2013 அன்று அனுமதிக்கப்புட்டு 29.11.2013 அன்று சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரையாரும் உரிமை கோராத நிலையில் வைத்திய சாலை பிரதே அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் 30-40 வயது மதிக்கத்தக்க பெயர்,முகவரி தெரியாத இன்னுமொரு ஆணின் சடலம் ஒன்று 06.11.2013 அன்று பருத்தித்துறை பொலிஸ் மூலம் கொண்டு வரப்பட்டு, வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. எனவே அச்சடலங்களை உறவினர், உரித்துடையோர் வந்து பெற்றுக் கொள்ளுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பி.பசுபதிராஜா கேட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மத்தியஸ்தத்துடன் 2014 இல் தமிழருக்கு தீர்வு!

## த.தே.கூட்டமைப்பு நம்பிக்கை

(கொழும்பு)

**2014 ஆம் ஆண்டில் சர்வதேச மத்தியஸ்தத்துடன் தமிழருக்குத் தீர்வு கிடைப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.**

சர்வதேச விசாரணை மூலம் அரச படைகளின் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், காணாமற்போனோரின் உறவுகளுக்கும், சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கும் நீதி கிடைக்கும் என்றும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று முன்தினம் மாலை தெரிவித்தவை வருமாறு,

முப்பது வருடாங்களுக்கு மேலாகத் தொடர்ந்த தமிழரின் ஆயுதப் போராட்டம் 2009 இல் முள்ளிவாய்க்காலுடன மௌனித்தது.

இதன் பின்னர் ஈழத் தமிழர்கள் அநாதைகள் என்ற நினைப்பில் இலங்கை அரசு செயற்பட்டு வருகின்றது.

எனினும், தமிழரின் பிரச்சினையையும், அவர்களின் நியாயமான கோரிக்கையையும், அவர்களின் போராட்டத்தின் உண்மைத் தன்மையையும் சர்வதேச சமூகம் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நன்றாக உணர்ந்துவிட்டது.

இதன் பிரகாரமாகத்தான் ஐ.நா. மனித உரிமைகள்சபையில்இலங்கை அரசுக்கு எதிராக இரண்டு தீர்மானங்கள் கடந்த 2012, 2013 ஆம் ஆண்டுகளில்சர்வதேச நாடுகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சர்வதேச சமூகத்தின் அறிவுரைகளைக் கேட்காமல் இலங்கை அரசு தன்னிச்சையாக செயற்பட்டு வருவதால் அதற்கு எதிராக மூன்றாவது பிரேரணையையும் எதிர் வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நிறைவேற்ற உலக நாடுகள் தீர்மானித்துள்ளன.

இந்தப் பிரேரணை மிகக் கடுமையான பிரேரணையாக, சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் பிரேரணையாக இருக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மட்டுமல்ல உள்நாட்டில், வெளிநாடுகளில் உள்ள பல தரப்பினரும் எதிர்பார்த்துள்ளனர்.

அத்துடன் இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளிடம் பல வழிகளில் அழுத்தங்களையும் கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் தீர்வுக்கான நல்ல சூழல் அமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னாலான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்றார்.(அ-2)

# இவ்வாண்டில் ஜனாதிபதி தேர்தலை நடத்தும் முயற்சியில் அரசாங்கம்

இந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

இந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது மிகவும் பொருத்தமானது என புத்திஜீவிகள் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளனர.

இதன்படி, 18ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான சாத்தியங்கள் குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

தேவை ஏற்பட்டால் மேலும் திருத்தங்களை கொண்டு வர அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

2013ஆம் ஆண்டுக்கான வாக்காளர இடாப்பின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதே அரசாங்கத்தின் திட்டமாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அண்மையில்ஜனாதிபதி தென்னாபிரிக்கா, கென்ய விஜயங்களை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதன் பின்னர் நடத்திய அவசர அமைச்சரவைக் கூட்டத்தில இந்த ஆண்டை தேர்தல் ஆண்டாக அறிவித்திருந்தார்.

இந்த ஆண்டில் ஜனாதிபதி தேர்தல அல்லது பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என அவர் குறிப்பிட்டிருந்தார். (அ-2)

# விமான நிலையத்தில் பதியும் நடைமுறை நிறுத்தம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுச் செல்பவர்களை விமான நிலையத்தில் பதிவு செய்யும் நடைமுறை நேற்று முதல் நீக்கப்படுகிறது.

நேற்று" முதல் பணியகத்தின் தலைமை அலுவலகத்திலும், பிரதான அலுவலகங்கள் சிலவற்றில் மட்டுமே பதிவுகள் மேற்கொள்ளப்படும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளரும் பேச்சாளருமான மங்கள ரநதெனிய தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்துக்கு வருவதற்கு முன்னதாக பணியகத்தின் பிரதான அலுவலகங்களான பத்தரமுல்லையிலுள்ள தலைமை அலுவலகம், அனுராதபுரம், பதுளை, சிலாபம், தம்புள்ள, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, கல்முனை, மத்துகம, கண்டி, கேகாலை, வவுனியா போன்ற அலுவலகங் களில பதிவு செய்ய முடியும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுச் செல்பவர்கள் தங்களது தொழில் ஒப்பந்தங்களை காண்பித்து பதிவு செய்த பின்னரேயே செல்ல அனுமதிக்கப்படுவார்க்ள்.

எனவே, பதிவு செய்வது கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவுசெய்யாமல் வெளிநாடு செல்வதற்கு எத்தனித்து இறுதி நேரத்தில பிடிபடுபவர்கள் வெளிநாடு செல்வதற்கு உள்ள சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் மங்கள ரநதெனிய தெரிவித்தார். (அ-2)

# இந்திய வீட்டுத்திட்டத்தில் 10 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு இந்த வருடம் இந்திய அரசாங்கத்தினால் 10 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டதாகவும் அடுத்த இரண்டு ஆண்டுகளில் 33 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுமென இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இரண்டாம் கட்ட இந்திய வீடமைப்புத் திட்டத்தில், வடக்கு கிழக்கைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு 43 ஆயிரம் வீடுகள் இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

எனினும் கடந்த ஆண்டில் 10 ஆயிரம் வீடுகளே கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது 16 ஆயிரம் வீடுகள் 2014 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மற்றும் மீதமுள்ள 17ஆயிரம் வீடுகள் 2015 இல் கட்டப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில், இவ்வருடம் மே மாதம் தொடங்கப்பட்ட இந்திய வீட்டுத் திட்டத்தில் 400 வீடுகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. 66 வீடுகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன.

வீட்டு திட்டத்தின் மூன்றாவது கட்டம், 4 ஆயிரம் வீடுகள் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் வாழ்கின்ற இந்திய வம்சாவளி தோட்ட தொழிலாளர்களுக்கு கட்டிக் கொடுக்கப்படவுள்ளது.

இலங்கையில் 50 ஆயிரம் இந்திய வீட்டுத் திட்டம் அமைக்கப்படவுள்ளதாக கடந்த 2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கால் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மீனவர்களுக்கு நேரும் கொடுமையை இனிமேலும் பொறுக்க முடியாது

## கலைஞர் கருணாநிதி தெரிவிப்பு

மீனவர்களுக்கு நேரும் கொடுமையை இனியும் தமிழகம் தாங்கிக் கொள்ளத் தயாராக இல்லை. மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண திமுக சார்பில் போராட்டம் நடத்தப்படும் என்று திமுக தலைவர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

கடல் ஆதாரத்தை நம்பி வாழும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சோதனைகளுக்கு மேல் சோதனையை சந்தித்து வருகின்றனர்.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் டி.ஆர். பாலு, பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து பிரச்சினைகளின் முழு வடிவத்தையும் எடுத்துக் கூறி வந்தார். பிரதமரும், வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் தக்க முடிவு எடுப்பதாக அவரிடம் உறுதி அளித்தனர்.

ஆனால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், அவர்களை இலங்கை சிறையில் அடைக்கப்படுவதும் நின்றபாடில்லை.

மீனவர் பிரச்சினை தொடர்பாக செவிமடுப்பதுபோல மத்திய அரசு காட்டிக் கொண்டாலும், உரிய பயன் விளையவில்லை.

இலங்கை கடற்படையினரால் மீனவர்களுக்கு நேரும் கொடுமையை இனியும் தமிழ்நாடு தாங்கிக் கொள்ளத் தயாராக இல்லை.

பிரச்சினையின் அவசர அவசியத்தை மனிதாபிமான கண்கொண்டு பார்க்கத் தவறி, பழி வாங்கும் நோக்கத்தோடு இலங்கை அரசின் ஆதரவோடு நடைபெறும் இந்தக் கொடுமையை எவ்வளவு நாளுக்குத் தான் தமிழக மக்களால் தாங்கிக் கொள்ள முடியும்

எனவே, இந்தப் பிரச்சினைக்கு கடுமையான மாற்று என்ன என்பதைத் தெரிந்து, தெளிந்து, இலங்கை கடற்படையின் அட்டூழியத்தை நேரடியாகவே சந்தித்து, அதில் முடிவு காண்பதற்கு தமிழகம் தயாராகி வருகிறது.

தமிழக மீனவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் களத்தில் நிற்பதற்கும், அவர்களைக் காப்பாற்ற எத்தகைய இடுக்கண்களை ஏற்பதற்கும் நானும் (கருணாநிதி), என் தலைமையில் உள்ள திமுகவும் தயாராக இருக்கிறது.

இதை எதிர்கொள்ளும் வகையில் போராட்டத்துக்கான திகதி விரைவில் குறிக்கப்படும் என்று கருணாநிதி கூறியுள்ளார். (அ-2)

# காலாண்டுக்கான மருந்துகள் ஒரே தடவையில் இறக்குமதி


(கொழும்பு)

அடுத்த வருடத்தின் முதல் காலாண்டுக்கு (4 மாதங்கள்) தேவையான அனைத்து மருந்து வகைகளும் ஒரே தடவையில் இறக்குமதி செய்யப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வைத்தியசாலைகளில் ஏற்படும் மருந்து தட்டுப்பாட்டை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்திற்கும் அதிகமான வகை மருந்துகள் ஜனவரி மாதத்தில இறக்குமதி செய்யப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியா, பங்களாதேஷ், தாய்லாந்து மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் இருந்து இம்மருந்துகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.(அ)



சமுர்த்தி நிதிய திட்டத்தின் கீழ் 60 பயனாளிகளுக்கு துவிச்சக்கர வண்டியும் 10 பயனாளிகளுக்கு தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இதனை நெல்லியடி சமுர்த்தி வங்கி முகாமையாளர் இ.உதயகுமார் வழங்கி வைத்தார்.

(படம்-[illegible])

# கோட்டக் கல்விப்பணிப்பாளர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் மன்னார் வலயத்தின் மன்னார், நானாட்டான் கோட்டக்கல்விப்பணிப்பாளர்பதவிகள் வெற்றிடமாகவுள்ளன.

இதற்கு ஆகக் குறைந்தது 3 வருடமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையுடைய இலங்கை கல்வி நிர்வாக சேவை III (பொது ஆளணி) மற்றும் வடமாகாண பாடசாலையைச் சேர்ந்த இலங்கை அதிபர் சேவை I,2.I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப் பதவிக்கு இ.க.நி.சே III இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் மட்டுமே இ.அ.சே. I,2.I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து தெரிவு மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவத்தினை வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் மாகாண கல்விப்பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்வி பணிப்பாளர் செல்வராசா கேட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் நிலை மாறுகால நீதியும் தமிழினப் படுகொலையும்

**அமரர் ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவு நிகழ்வில், அருட்தந்தை எழில் றஜன் நினைவுப் பேருரையிலிருந்து,**



அந்நிய அரசியல் நிகழ்ச்சித் திட்டங்கள், அது மேற்குலகமாயிருக்கலாம். இல்லாவிடின் அயல் நாட்டுத் திட்டமாக இருக்கலாம். இவை மக்களை தமிழ்த் தேசிய மைய நீரோட்டத்திலிருந்து விளிம்பு நிலைக்கு கடத்திச் செல்வதாக அமைகிறது. கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் கட்டுடைப்புக்கள் ஏற்படுத்துகின்ற அரசியல் இயங்குதள வெறுமைகள் விடுதலைப் போராட்டத்தை திட்டமிட்டு மலினப்படுத்துவதாக அமைகின்றது. இந்த மிக நுட்பமான கிளர்ச்சி எதிர்ப்பு உத்திக் கட்டமைப்புக்கள் இன அழிப்பின் நீட்சியாகவே நோக்கப்படவேண்டும்.

இன அழிப்பு ஒடுக்குமுறைகளிலிருந்து ஒரு சமூகம் விடுபட வேண்டுமாயின் எதிர்ப்பரசியலுக்கான அரசியல் வெளி உருவாக்கப்பட்டு, போராட்டம் மக்கள் மயப்படுத்ப்பட வேண்டியது அவசியமாகின்றது. மக்கள் அணிதிரள்தல், கீழ் இருந்து மேல் நோக்கி நகருகின்ற, உள்வயப்படுத்துகின்ற போராட்ட உத்தியானது, தமிழ் விடுதலையை அறமயப்படுத்துவதோடு ஏற்புடமைத் தன்மையையும் வழங்குகின்றது.

இன அழிப்பின் வடுக்களையும் இழப்புக்களின் அகோரத்தையும் சந்தித்த மக்களிற்கு சர்வதேச தளத்தில் உள்ள நீதி சார்ந்த பொறிமுறைகளை விளக்குவதனூடு, விடுதலைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தக் கூடிய வழிமுறைகளாக இவை அமையக் கூடும் என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை. மீண்டும் மேற்குலகத்தால் உருவாக்கப்பட்ட நீதி சார்ந்த பொறிமுறையினூடு, ஈழ விடுதலைப் போராட்டத்தை அணுகுவதில் சிக்கல்கள் உள்ளதை கருத்தில் எடுக்க வேண்டிய தேவையும் உள்ளது. இறுதியாக நடந்தேறிய மக்கள் தீர்ப்பாயத்தில் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா தமிழின அழிப்பில் பங்கேற்றதற்கான சான்றுகள் முன்கொணரப்பட்டு சட்ட நிபுணர்களால் அவை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதற்கு மாற்றீடான நீதிப் பொறிமுறைகள் காணப்படாதவிடத்து சர்வதேச தளத்தில் ஏற்கனவே உள்ளவற்றை பயன்படுத்துவதற்கு வலிந்து தள்ளப்படுகின்ற நிலைமையும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.

மே 2009 இன் பின்னான இலங்கை அரசியல் தளத்தில் போலியாக உருவாக்கப்பட்ட நிலைமாறு காலம், ஏற்கனவே விடுதலைப்போர் முடிந்து ஏற்பட்ட நிலைமாறுகால மாற்றங்களோடு ஒப்பிட முடியாததென்பதோடு இலங்கையின் நிலைமாறுகாலம் உதிரியான ஒற்றை மாதிரியாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

இலங்கை அரச தரப்பு தென்னாபிரிக்க உண்மை நல்லிணக்க ஆணைக்குழு மாதிரியை பின்பற்றுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் அம்மாதிரி இலங்கைக்குப் பொருத்தமா? இல்லையா? என்பது பற்றிய ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்திற்குள் தமிழ்ப் புத்திஜீவிகள் சமூகம் தள்ளப்பட்டுள்ளது.

இச்சமயம் பின்-நிலைமாறு கால நீதி பற்றிய அறிமுகத்தை வழங்குவதுடன், ஏனைய நாடுகளின் நிலைமாறுகால, பின்-நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளின் பொருத்தப்பாட்டினையும் ஆராய்வது அவசியமாகும்.

அரசியல் நிலைமாறு காலத்தை எதிர்நோக்கும் அரசுகளும், அரசாங்காங்களும் சர்வதேச சட்டத்திற்கு அமைவான ஒரு நிலைமாறு கால நீதிப் பொறிமுறையினை பின்பற்ற எதிர்பார்க்கப்படுகின்றார்கள். இப்பொறிமுறை புவியியல், அரசியல், கலாசாரம் சார்ந்து மண்மயப்படுத்தப்பட்ட ஒன்றாக விரிவடைகின்றது. இப்பின்புலத்தில் வெவ்வேறு நிலைமாறுகால, பின்-நிலைமாறுகால மாதிரிகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. அவற்றுள் தென்னாபிரிக்க மாதிரியும் ஒன்று. தென்னாபிரிக்க மாதிரியவிட வேறு மாதிரிகளும் உள என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை அரசு தென்னாபிரிக்க மாதிரியை பின்பற்ற முனைவதற்கான அரசியல் பின்னணி வேறு என்பதையும் இங்கு பகிர விரும்புகின்றேன். போாக்குற்றவாளிகளை காப்பாற்றும் ஓர் உள்நோக்கில் இலங்கை அரசு மன்னிப்பை மையப்படுத்திய மீள்கட்டமைக்கும் நீதிப் பொறிமுறையை வலிந்து சுமத்த எத்தனிக்கின்றது.

இங்கு கூறப்படும் பின் நிலைமாறுகால நீதி முறை அமைப்பு முறை, சிலி என்கிற லத்தீன் அமெரிக்க நாட்டில் பின்பற்றப்பட்டது. நான் ஏன் தென்னாபிரிக்க மாதிரிக்கு மாற்றாக இதை முன்வைக்க முயல்கின்றேன் என்பதையும் இங்கே காணலாம்.

கடந்த தசாப்தம், உலக வரலாற்றில் குறிப்பாக, அரசியல் நிலைமாறு காலத்தை எதிர்நோக்கிய, சர்வாதிகார ஆட்சியிலிருந்து ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்த நாடுகளில்-நிலைமாறுகால நீதி மிக முக்கிய தேவையாக, தேடலாக- மனித உரிமை மீறல்கள் மலிந்து போன கடந்த தசாப்தத்திலிருந்து நீதி சார்ந்த சுதந்திர, சமத்துவ, சமாதான அரசியல் நீரோட்டத்திற்கு வருவதற்கு ஏற்புடையதாக அமைந்திருந்தது. ஓர் இனப்படுகொலையை மனித உரிமை மீறல் சார்ந்து விவரிப்பது அதன் செறிவுத் தன்மையை மலினப்படுத்துவதாக இருக்கும் என்பதையும் கூறி வைக்க விரும்புகிறேன்.

இனப்படுகொலை, இன அழிவு சார் சூழலில் இருந்து பொது வெளிசார் மைய அரசியலுக்கு வந்த நாடுகளின் நிலைமாறு நீதிப் பொறிமுறை களையும் இந்நேரத்தில் விமர்சித்து, மீளாய்வு செய்து எமக்கான நிலைமாறு கால நீதிப் பொறிமுறையை உருவாக்குவது அவசியமாகின்றது. நிலைமாறுகால நீதிக் கட்டமைப்புக்கள் பாதிக்கப்பட்ட விளிம்புநிலை சார்ந்தவர்களை மையப்படுத்தியும் விடுதலை, அடிமைத்தள உடைப்பு, சமத்துவம், பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்றுக் கொடுத்தல் சார்ந்தும் அமைய வேண்டும் என்பதை சாவ்தேச சட்டம் வலியுறுத்துகின்றது. இதையே ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகமும் வலியுறுத்துகின்றார். நிலைமாறு கால நீதியில் என்னென்ன உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற சட்டம், அது குறித்த வரையறைக்குள் இருப்பதை தவிர்த்து நாடுகள் தங்களுக்கேற்ற வடிவில் நிலைமாறு கால நீதிக் கட்டமைப்புக்கள் வெவ்வேறு பரிமாணங்களில் உருவா[illegible] நிலைமாறு [illegible] தனது கொள்கை விளக்கவுரையில் நிலைமாறுகால நீதிக்கட்டமைப்புள் பின்வரும் கூறுகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

**முதலாவது- குற்றவியல் வழக்கு**

மாந்த நேயத்துக்கு எதிராக, மனித உரிமை மிறல்களில் ஈடுபட்ட அமைப்புக்கள், அரசுகள் ஐ.நா. படுகொலை சட்ட வரையறையின்படி ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு செயற்பட்டிருப்பின் அவர்கள் அனைவரும் சர்வதேச போர்க்குற்ற விதிகளுக்கு அமைவாக தண்டிக்கப்பட வேண்டும்.

**இரண்டாவதாக-இழப்பு சரிசெய்யும் எதிரீடு**

இவ்வியக்க முறையினூடு நிலைமாறுகால அரசியலை முன்னெடுக்கும் அரச தரப்புக்களோ அல்லது அரசாங்கங்களோ, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை சீர் செய்யும், பொது நுட்பத்தை உருவாக்க வேண்டும்.

**மூன்றாவதாக- நிறுவனக் கட்டமைப்பு மாற்றம்**

அரச இயந்திர பொறிமுறையினூடு வலிந்து திணிக்கப்பட்ட, நிறுவனமயப்படுத்தப்பட்ட, மனித உரிமை மீறல்கள், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை பொறிமுறை நுட்பங்கள் அவற்றை இயக்கும் கட்டமைப்புக்கள் தகர்க்கப்பட வேண்டும். இவ்வாறு இன்னொரு முரண் நிலை உருவாகாதவாறும், தண்டனையிலிருந்து தப்பிக்கும் கலாசாரம் ஏற்படாதவாறுக்குமான சூழல் உறுதி செய்யப்பட வேண்டும்.

நான்காவதாக- உண்மை நிலை கண்டறியும் ஆணைக் குழுக்கள் கடந்தகால மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும், இனப்படுகொலை, இன அழிப்பு சார்பாகவும் நடந்தேறியவைகளை கண்டடையும் ஆணையங்கள் அமைக்கப்பட்டு மனித உரிமை மீறல்கள், இனப்படுகொலை நடந்ததற்கான மூல காரணங்கள் ஆராயப்பட்டு மீண்டும் நிகழாதிருக்க பரிந்துரைகள் முன்மொழியப்படுதல் அவசியம்.

இவற்றைவிட வெவ்வேறு நாடுகள் தத்தம் அரசியல் பின்புலத்திற்கேற்றவாறு இன்னும் ஓரிரு பண்புகளை சேர்த்துள்ளன. அவற்றுள் பொதுவாக இனப்படுகொலை நினைவுத் திறத்தை தக்க வைக்கக் கூடிய செய்றபாடுகளையும் நல்லிணக்க முயற்சிகளையும் குறிப்பிட்டுக் கூற முடியும்.

ஆய்வாளர் ஜோன் எல்ஸ்ரெர் நிலை மாறுகால நீதியின் வரலாற்றை பின்வருமாறு மிகச் சுருக்கமாக குறிப்பிடுகின்றார்.

நிலைமாறுகால நீதியின் பூர்வீகம் ஜனநாயக அரசியல் கருத்தியலுடன் ஆரம்பிக்கின்றது. கிரேக்க வரலாற்றில் நிகழ்ந்த இரு சந்தர்ப்பங்களில் ஆட்சி மாற்றம் நிகழ்கின்ற போது, தவறிழைத்த ஆட்சியாளர்கள் தண்டிக்கப்பட்டனர். அதன் பின்னர் ஆங்கில, பிரெஞ்சு மன்னராட்சி மீளக் கட்டமைக்கப்பட்ட போதும், நிலைமாறுகால கட்டமைப்பு பொறிமுறைகள் பயன்படுத் தப்பட்டதாக குறிப்பிடுகின்றார்.

நவீனத்துவ அணுகுமுறை இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஆரம்பிக் கின்றது. போரில் தோல்வியடைந்த நாசிப் படைகளின் போர்க் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள். 1970களில் தென் ஐரோப்பாவில் சர்வாதிகார வீழ்ச்சியின் பின் ஏற்பட்ட அரசியல் மாற்று வெளியை குறிப்பிடலாம். இவற்றுள் போர்த்துக்கல், ஸ்பெயின், கிரேக்கம் ஆகிய ஒரு சில நாடுகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஸ்பானிய தேச மாதிரி ஒற்றையான ஆய்வுக்குள்ளாக்கப்படுவது அவசியம். ஏனெனில் அதன் அணுகுமுறை நிலைமாறுகால நீதியின் வரையறைக்குட்பட்டதாக அமையவில்லை.

1980 களிலே லத்தீன் அமெரிக்க நாடுகளிலே இராணுவ ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மக்களாட்சி முறை நடைமுறைக்கு வந்தது. பெரும்பாலான லத்தீன் அமெரிக்க நாடுகளின் வெளிச் சென்ற இராணுவ அரசுகள் குற்றவாளிகளைப் பாதுகாத்துக்கொள்ள ஏதுவான பொறிமுறைகளை உருவாக்கி தண்டனையிலிருந்து தப்பித்துக்கொண்டனர். ஆர்ஜென்டீனா விதிவிலக்காக நடந்துகொண்டது. போர்க் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் அதற்குரிய தண்டனையைப் பெற்றுக் கொண்டனர்.

பொலிவியாவிலும் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் ஒரு சிலருக்கு போர்க்குற்ற தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. பிரேசிலில் போர்க் குற்றவாளிகள் தங்களுக்குத் தாங்களே மன்னிப்பை வழங்கிக் கொண்டார்கள். ஆனால், சாவோ பௌலோ மறைமாவட்ட பணியாளர்களின் விடா முயற்சியினால் போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்கள். சிலி என்கிற நாடு நிலைமாறுகால நீதியினை மிகச் சிறப்பாக முன்னெடுத்துச் சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014 புதுவருட பலன்கள்

## கடகம்



புனர்பூசம் 4 ஆம் பாதம்,
பூசம், ஆயில்யம்

**உச்ச குரு உன்னத வாழ்விற்கு வழிகாட்டும்! தேசமெங்கும் செல்வாக்குப் பெற்று வாச மரலாய் வாழும் கடக இராசி நேயர்களே!**

ஆசையோடு எதிர்பார்த்துக் காத்திருந்த புதுவருடம் இப்பொழுது அடியெடுத்து வைத்திருக்கிறது. உங்கள் யோசனைகள் வெற்றிபெறும் விதத்தில் உங்களது ராசியிலேயே குருவும் உச்சம் பெறுகிறது. மங்கல் மேளம் இல்லத்தில் முழங்கும். மாபெரும் சபைகள் உங்களை அழைக்கும். தங்கமும், வெள்ளியும் தடையின்றி வந்து சேரும்.

வங்கக் கடல்போல வாய்த்த மனம் பெற்ற உங்களுக்கு ஞானகாரகன் கேதுவிற்குரிய எண் ஆதிக்கத்தில் பிறக்கும் புதுவருடத் தொடக்கத்தில் விரய ஸ்தானத்தில் குரு வீற்றிருக்கிறார். அதுவும் வக்ர இயக்கத்தில் வளமான பார்வையை வழங்குகிறார். அதேநேரத்தில் 6-ம் இடத்தில் ஆதித்தனும், அம்புலியும், புதனும் சஞ்சரிக்கிறார்கள். இத்தனைக்கும் மத்தியில் பிறக்கும் இந்தப் புது வருடத்தில் உச்ச

**சிவல்புரி சிங்காரம்**

குருவின் ஆதிக்கத்தால் உன்னத வாழ்வு அமையப்போகிறது.

பொதுவாக நீங்கள் சிந்தித்து செயற்படுவீர்கள். கலா ரசனை மிக்கவர்கள். உங்கள் பேச்சு மற்றவர்களை மயக்கும். இருந்தாலும், உங்கள் மீதும், உங்கள் திறமையின் மீதும் உங்களுக்கு நம்பிக்கை இருக்காது. எனவே, யாராவது ஒருவரைக் கூட்டணி சேர்த்துக் கொண்டுதான் பிரகாசமான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள முடியுமென்று நினைப்பீர்கள். உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலைகளை நீங்கள் முழுமனதோடு செய்ய நினைத்தால் வெற்றிகரமாக செய்துமுடிப்பீர்கள். இல்லையென்றால் அரைகுறையாக செய்துவிட்டு அப்படியே வந்துவிடுவீர்கள்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைக் கொண்ட உங்களுக்கு சுய ஜாதகத்திலுள்ள கட்டங்களையும், 2014-ம் ஆண்டு புதுவருட கட்டத்தையும், ஒப்பிட்டுப் பார்த்து பலன்களைத் துல்லியமாக அறிந்து கொள்ளலாம்.

**1.1.2014 முதல் 12.6.2014 வரை**

வருடத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சந்திரன், தனாதிபதி சூரியனுடன் இணைந்து 6-ல் சஞ்சரிக்கிறார். அதோடு விரயாதிபதி புதனுமல்லவா சேர்ந்திருக்கிறார். எனவே, பணவரவு திருப்திகரமாக இருந்தாலும் செலவு நடைகள் கூடுதலாகவே இருக்கும். வீடு மாற்றம், இடமாற்றம் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதையும் யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது.

அந்நிய தேசத்திற்கு வேலை வாய்ப்பை தேடிச் சென்றவர்கள் அங்கு வேலை கிடைக்காமல் தாய்நாடு திரும்பலாம். 6-க்கு அதிபதி குரு வக்ரம் பெற்று சஞ்சரிப்பதால் உத்தியோக வாய்ப்புகள் தேடி வரும் என்றாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலுமா என்பது சந்தேகம்தான்.

செவ்வாய் ஆதிக்கத்தால் உடன பிறப்புகளின் வழியே ஒரு நல்ல வாய்ப்பு தேடிவரும். அரசு வழிச் சலுகைகளில் தாமதம் ஏற்படலாம். ஆரோக்கியப் பாதிப்புகள் அகலும். சுக்ரன் வக்ரம் பெற்று சஞ்சரிப்பதால் பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்குவரும். பெற்றோர் வழியில் இருந்த மனஸ்தாபங்கள் மாறும். என்ன, இருந்தாலும் குருப் பெயர்ச்சிவரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாடும், பவுர்ணமி தோறும் கிரிவலம் வருவதும் நல்லது.

**விருச்சிக சனியின் சஞ்சாரம்!**

இதுவரை உங்கள் ராசிக்கு அர்த்தாஷ்டமச் சனியாக வாசம் செய்த சனிபகவான் இந்த வருடம் கடைசியில் 5-ம் இடமான விருச்சிக ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். புத்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி புத்திர விருத்தியை ஒருசிலருக்கு உருவாக்குவார். பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். சனியின் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால் வெளிநாட்டு முயற்சிகளில் ஒரு சிலருக்கு வெற்றி கிடைக்கும். வீடுமாற்றம், வாகன மாற்றம் செய்ய தகுந்த வாய்ப்புகள் வந்து சேரும்.

**குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!**

குரு உங்கள் ராசிக்கு 6,9-க்கு அதிபதியாகிறார். சனி உங்கள் ராசிக்கு 7, 8-க்கு அதிபதியாகிறார். எனவே, இந்த வக்ர காலத்தில் நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். இரண்டு கிரகத்திற்கும் ஓரிடத்தின் ஆதிபத்யம் நல்ல இடத்தின் ஆதிபத்யமாக இருக்கிறது. எனவே குடும்பத்தில் சில பிரச்சினைகள் உருவாகி மறையும். கட்டிடங்கள் கட்டி வைத்தும் குடியேற முடியவில்லையே என்ற கவலை ஏற்படும்.

**கடக ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்தப் புதுவருடம் உங்களுக்குப் புதிய பாதையை அமைத்துக் கொடுக்கப் போகிறது. உச்சம்பெறும் குருவால் உன்னத வாழ்க்கை அமையும். ஜூன் மாதம் வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. சுபச் செலவுகள் அதிகரிக்கும். வீடு மாற்றச் சிந்தனை மேலோங்கும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும்கூட கிடைக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஊதிய உயர்வும், மேலதிகாரிகளின் அனுகூலமும் கிடைக்கும். குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். ஒற்றுமை பலப்படும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். சனிப்பெயர்ச்சி காலத்தில் கூடுதலாக கவனம் தேவை. சர்ப்ப கிரக வழிபாடு சந்தோஷத்தை நிலையாக வைத்துக் கொள்ள வழிகாட்டும். ராகு-கேது பெயர்ச்சி காலத்தில் உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். தாய்வழி ஆதரவு கிட்டும்.

**நலம் தரும் ராகு-கேது பெயர்ச்சி!**

இதுவரை அர்த்தாஷ்டம ராகுவாக சஞ்சரித்தவர் இந்த ஆண்டு மூன்றாம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். முன்னேற்றம் தரும் இடமான மூன்றில் ஜூன் 21 முதல் தனது பின்னோக்கிச் செல்லும் பயணத்தை மேற்கொள்ளப் போகிறார். அதே நேரத்தில் 9-ம் இடத்தில் மீன ராசியில் கேது சஞ்சரிக்கப் போகிறார். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். முன்னேற்றங்கள் கூடும். தொழில் வளர்ச்சிக்கு தொகை வந்துகொண்டேயிருக்கும். வழக்குகள் சாதகமாக அமையும். உடன்பிறப்புகள் உங்கள் பணிக்கு உறுதுணையாக இருப்பர்.

இல்லத்தில் சுபகாரிய நிகழ்வுகள் நடப்பதில் தாமதம் ஏற்படுகிறதே என்று கவலைபட்டவர்கள் இனிக் கவலைப்பட தேவையில்லை. கை கொடுத்துதவும் நண்பர்கள் உங்கள் கவலை தீர வழிவகுப்பர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இலாகா மாற்றம் உருவாகலாம். கேது பலத்தால் தந்தை வழி உறவில் சிறிது விரிசல்கள் ஏற்பட்டு அகலும். பூர்வீக சொத்துக்களை விற்பனை செய்துவிட்டுப் புதிய சொத்துக்களை வாங்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கூடுதல் லாபம் தொழிலில் வந்து சேரும். எனவே, ஆடம்பரச் செலவுகளை அதிகம் செய்வீர்கள். ஆபரண சேர்க்கைக்கு அஸ்திவாரமிடுவீர்கள்.

ராகு-கேதுக்கள் முறையாக நற்பலன்களை வழங்க முறையாக நீங்கள் சர்ப்ப சாந்தி பரிகாரங்களை செய்து கொள்வது நல்லது. சுய ஜாதகத்தில் ராகு-கேதுக்களின் பலமறிந்து அதற்குரிய ஸ்தலங்களுக்கு சென்று வழிபட்டு வரலாம்.

**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி!**

புத்தாண்டில் உங்கள் ராசியில் குரு உச்சம் பெறப்போகிறார். இந்த ஆதிக்கம் ஜூன் 13-ம் தேதி முதல் நிகழவிருக்கிறது. ஜென்ம குருவின் ஆதிக்கமாக இருந்தாலும்கூட 9-ம் இடத்திற்கு அதிபதியான குரு உச்சம்பெறும் பொழுது, பொன், பொருட்கள் வந்து சேரும். நண்பர்கள் உதவிக்கரம் நீட்டுவர். அண்ணன் தம்பி பகை மாறும். எப்பொழுதோ கொடுத்த கடன்கள் இப்பொழுது வசூலாகும்.

பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். மதிநுட்பத்தால் மகத்தான காரியங்கள் பலவற்றையும் செய்து சாதனையாளர்களின் விருதுகளைப் பெருமளவு பெறப் போகிறீர்கள். ஒவ்வொரு வியாழக்கிழமையும் விரதமிருந்து குரு தெட்சிணாமூர்த்தியை வழிபாடு செய்வதோடு, அனுகூலம் தரும் நாளில் திசைமாறிய தென்முகக் கடவுளையும் வழிபட்டு வந்தால் தித்திக்கும் விதத்தில் வாழ்க்கைப் பாதை அமையும்.

குருவின் பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களிலும் பதிவதால் அந்த இடங்களெல்லாம் புனிதமடையப் போகின்றது. குரு பார்க்கக் கோடி நன்மை என்பதால் இனி, கோடி நன்மைகள் கிடைக்கும்.




வாடிய மனம் இனி மகிழ்ச்சி காணும். தேடிய நற்பலன்களெல்லாம் இல்லம் தேடி வரும். சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள்.

கல்யாண வாய்ப்புகள் கைகூடி வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. பிரிந்த தம்பதியர் வந்திணைவர். பிரச்சினைகள் அனைத்தும் நல்ல முடிவிற்கு வரும். வழக்குப் போட்டவர்கள் வாபஸ் பெறுவர். வாரிசுகளுக்கு கூட வெளிநாட்டு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பீர்கள். ஆரோக்கியக் குறைபாடுகள் அகலும். சுறுசுறுப்போடும், விறுவிறுப்போடும் செயறபட்டு சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். வாகனம் புதிதாக வாங்கும் வாய்ப்பு கிட்டும். அங்ஙனம் வாங்கும் சூழ்நிலை அமைந்தவர்கள் அதிர்ஷ்ட எண் ஆதிக்கத்தில் வாங்கினால் அதை எடுத்துச் செல்லும் இடங்களெல்லாம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற இயலும்.

**செல்வவளம் தரும் சிறப்பு வழிபாடு!**

ராசிநாதன் சந்திரன் என்பதால் திங்கள் தோறும் சாந்த ரூப அம்பிகையை வழிபட்டு வாருங்கள். பிறந்த திகதியின் அடிப்படையில் சிறப்பு வழிபாட்டை மேற்கொள்வதோடு யோக பலம் பெற்ற நாளில் சிவன் உமையை வழிபட்டு வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளுங்கள்.



# உச்சகுரு உன்னத வாழ்விற்கு வழிகாட்டி மகிழ்விக்கும்!

**நாளை சிம்மம்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதவுரிமை தொடர்பான விடயங்களில் சர்வதேச நியாயம் கிடைக்கட்டும்!

தமிழ்த் தேசிய இனம் எதிர்பார்த்த அளவுக்கு அரசியல் தீர்விலோ அல்லது மனிதவுரிமைகள் விடயங்களிலோ குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எதையும் அடையாமல் 2013 ஆண்டு முடிவுக்கு வந்துள்ளது என வட மாகாணசபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.



அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச்செய்தியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அதில் கூறியுள்ள விடயங்கள் வருமாறு,

தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக அமையாது என கருதப்படும் மாகாணசபை முறைமை ஒன்று வடக்கு மாகாணத்தில் உருவாக்கப்பட்டு இருக்கின்றது.

இந்த கட்டமைப்பையும் முறைமையையும் எங்களுடைய அரசியல் தீர்வு நோக்கிய நகர்வின் ஜனநாயகத் தளமாக கொண்டு செயற்படும் எண்ணப்பாடு வலுப்பெற்று வருகின்றது.

இந்தச் சூழ்நிலையிலேயே 2014 ஆம் ஆண்டு பிறந்துள்ளது. தமிழ் தேசிய மக்களை பொறுத்தவரையில் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்ற வேண்டிய ஆண்டாக இந்த புதுவருடம் இருக்கின்றது.

யுத்தத்தினால் இடம் பெயர்ந்து இந்தியாவிலும் சொந்த மண்ணிலும் அகதிகளாக வாழ்கின்ற எங்களுடைய மக்கள் அவர்களது வாழ்விடங்களில் மீண்டும் குடியேற்றப்பட வேண்டும்.

தத்தமது வாழ்வாதாரங்களை தொலைத்து நிற்பவர்களுக்கு வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, தங்கு நிலை பொருளாதாரத்தில் இருந்து தனித்து நிற்கும் வாழ்வாதார நிலைக்கு கொண்டு வரவேண்டும்.

அவரவர் காணிகளில் அவரவரே குடியமர வழிவகைகள் செய்யப்பட வேண்டும். தமது வாழ் வியலுக்கு விடிவு கிடைக்காதா? என்று எண்ணி ஏங்கி நிற்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும் ஆதரவற்ற சிறுவர்களுக்கும் மாற்று வலுவுள்ளோருக்கும் அவரவரது வாழ்வை மேம்படுத்த வேண்டி இருக்கிறது.

விவசாயம், கைத்தொழில், மீன்பிடி போன்ற துறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அந்தந்த துறை சார்ந்த மக்களது பொருளாதாரம் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது.

இந்த கனவுகள் செயலுருவப்படுவதற்காக எமது மக்கள் எல்லா அச்சுறுத்தல்களையும் கட்டுப்பாடுகளையும் மீறி எமக்கு வழங்கிய ஆதரவையும் ஆணையையும் முன்னிலைப்படுத்தி எமது வடக்கு மாகாண சபை செயற்படும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

எமது இந்த முயற்சிகளுக்கு வடமாகாண சபை சார்ந்த அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் மட்டுமின்றி, மத்திய அரசு சார்ந்த அதிகாரிகளும் அலுவலகர்களும் சகல பொது நிறுவனங்கள் சார்ந்தவர்களும் எம்முடன் இணைந்து செயற்படவேண்டும்.

இந்த சூழ்நிலையில் 2014 ஆம் ஆண்டு மனிதவுரிமை தொடர்பான விடயங்களில் சர்வதேச நியாயம் கிடைக்கவும் எமது மக்களுக்கு சுபீட்சமான, சுதந்திரமான, ஒளிமயமான வாழ்வு கிடைக்க வேண்டும் என்று இறைவனை பிரார்த்தித்து வடக்கு மாகாண சபையின் சார்பில் வாழ்த்துகின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மகிழ்ச்சிமிகு மாற்றங்களை தரவல்ல ஆண்டாகட்டும்!



பிறந்திருக்கும் புத்தாண்டின் வரவோடு எமது மக்களின் வரலாற்று வாழ்விடங்கள் தோறும் புதுவிடியல் பூக்கட்டும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த வாழ்த்துச் செய்தியில், பிறந்து வரும் ஒவ்வொரு புத்தாண்டினையும் மனித குலம் நம்பிக்கையோடு வரவேற்று மகிழ்கிறது.

கடந்து வந்த இடர்களும் துயர்களும் விடுபட்டு, பிறந்துவரும் புத்தாண்டு புது வாழ்வையும் புது மகிழ்வையும் தரும் என்ற நம்பிக்கையே எங்கும் துளிர் விடுகிறது.

இந்த நம்பிக்கையோடும் விருப்பங்களோடும்நாமும் எமது மக்களோடு இணைந்து, பிறந்து வரும் புத் தாண்டினை வரவேற்று மகிழ்கிறோம்.

ஒவ்வொரு ஆண்டுகளும் விடைபெற்றுச் செல்லும்போது, நடந்து வந்த பாதையில் நாம் கடந்து வந்த அனுபவங்களே ஒளிமயமான எதிர்காலத்தைப் படைக்கும் படிப்பினைகளை எமக்குத் தருகின்றன.

மாற்றம் ஒன்றைத் தவிர இங்கு மாறாமல் இருப்பவை எதுவுமில்லை. எமது மக்களின் வாழ்விடங்கள் தோறும் மகிழ்ச்சி தரும் மாற்றங்களைப் படிப்படியாக தொடர்ந்தும் பெற்றிட நாம் உறுதி கொள்வோம்.

அமைதியும் சமாதானமும் இங்கு நீடித்து நிலவ வேண்டும். சகலரும் சரி நிகர் சமன் என்ற அரசியல், சமூக உரிமைகளை எமது மக்கள் அனுபவித்து மகிழ வேண்டும்.

வீடிழந்தவர்கள், நிலமிழந்தவர்கள், ஊர்துறந்தவர்கள் என எவருமின்றி, எமது நிலம் எமக்கே சொந்தம் என்ற உரிமை இங்கு பாதுகாக்கப்பட வேண்டும்.

வறுமை ஒழிந்து, வளமிகு வாழ்வு செழித்தோங்க வேண்டும். உழைப்பதற்கான உரிமையும் ஏனைய அனைத்து அடிப்படை வசதிகளும் மேலும் சீர் செய்யப்பட வேண்டும்.

பிறந்திருக்கும் புத்தாண்டு எமது மக்களுக்கு மகிழ்ச்சி மிகு மாற்றங்களை தரவல்ல ஆண்டாக அமையட்டும்.

# மகிழ்ச்சி நிறைந்த ஆண்டாக மலரட்டும்!

இனம், மதம், மொழிகள் என்ற வேலிகளைத் தாண்டி ஐக்கிய இலங்கைக்குள் வாழும் மக்களாகப் பொறுமை, விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை, ஏற்றுக் கொள்தல் போன்ற நட்பண்புகளை ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டும்.

பிறந்திருக்கும் இவ் 2014 ஆம் ஆண்டு எல்லோருக்கும் மகிழ்ச்சி நிறைந்த ஆண்டாக இருக்க வேண்டும் என வேலணை பிரதேச தவிசாளர் சின்னையா சிவராசா தெரிவித்துள்ளார்.

புது வருடத்தை முன்னிட்டு அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் கூறியுள்ள விடயங்கள் வருமாறு,

இந்துமா சமுத்திரம் இன்னும் தேடி வந்து தாலாட்டம் சிறு தீவுக் கூட்டங்கள் யாழ்.நகருக்கு அணி செய்து அழகு சேர்க்கின்றன... பண்ணைதாண்டும் பொழுது இயற்கை அழகும் இதமான காற்றும் சுகமாக இருக்கும். மனதிற்கு சுமைகள் பல இருந்தாலும் இயற்கை தொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் மக்கள் கூட்டமே இத்தீவுக் கூட்டங்களில் அதிகம்... முன்னொரு காலத்தில் இடிந்து போன சுவர்களும் இழந்து போன வாழ்க்கையும் கரிய இருளும் தான் எம் தீவுகளின் அடையாளங்கள்... நகரப்புறங்களை சுற்றி வரும் மின்கம்பிச் சுருள்கள் எம் தீவக தேசத்தை எட்டிப் பார்க்க மறுத்தன.

இந்த நிலையில் தான் ஜனாதிபதியின் ஆலோசனையில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வழிகாட்டலில் எம் தீவ தேசமும் தன் தீராத சுமைகளை இறக்கத் தொடங்கியது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு எம் தேசத்தை தொடங்கியது. குன்றும் குழியும் நிறைந்த வீதிகள் சில்லறைப் பூக்களாக சிரிக்கத் தொடங்குகின்றன.

இவ்வாறு மலரும் புதுவருடத்தில் அபிவிருத்திகள் பலகண்டு தேசம் செழிப்படையும் மனதில் உறுதி கொள்கின்றேன்.

# வெளிநாட்டில் வசிப்போரின் காணிகளை போலி ஆவணங்கள் தயாரித்து விற்பனை

(கொழும்பு)

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் காணிகளை போலி ஆவணங்கள் தயாரித்து வேறு நபர்களுக்கு விற்பனை செய்து வந்த கும்பலை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

கிறிஸ் நாட்டில் வசிக்கும் இலங்கையர் ஒருவரின் காணியை வேறு நபருக்கு விற்பனை செய்த போதே நான்கு சந்தேக நபர்களை இவ்வாறு கைதுசெய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பெண்ணும் மூன்று ஆண்களும் அடங்குவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

காணியை விலைக்கு வாங்குபவர்கள் போன்று வேடமிட்டுச் சென்ற கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நுவன் வெதசிங்க தலைமையிலான குழுவினரே சந்தேக நபர்களை மடக்கிப் பிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வெளிநாடுகளில் வசிப்பவர்களின் காணிகள் போலி ஆவணங்கள் தயாரித்து விற்பனை செய்யப்பட்டுவருவதாக கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட விசேட குழுவினர் போலி ஆவணங்களை சமர்ப்பித்து 23 இலட்சம் ரூபா பெற்று நுவரெலியா பிரதேசத்தில் காணி ஒன்றை விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்களின் காணி தொடர்பில் சந்தேக நபர்கள் கச்சேரி அல்லது காணிப்பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்குச் சென்று அதன் உரிமையாளர் தொடர்பில் தகவல்களை பெற்று தான் குறித்த காணியின் உரிமையாளர் போன்று ஆவணங்களை போலியாக தயாரித்து அந்தக்காணி தொடர்பில் பத்திரிகைகளில் விளம்பரம் செய்துவந்துள்ளனர்.

இதுபோன்று இரண்டாவது முறை காணியை விற்பனை செய்ய முயற்சித்த போதே கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினர் வேடமிட்டு பத்திரிகையில் பார்த்து காணி வாங்க வந்தவர்கள் போன்று நடித்து மேற்படி நான்கு சந்தேக நபர்களையும் மடக்கிப் பிடித்துள்ளனர்.


இதுபோன்ற விடயங்களின் போது மக்கள் விழிப்புடன் செயற்படுமாறு பொலிஸ் திணைக்களம் கேட்டுக்கொள்கிறது. (அ-2)

# அவசர தொலைபேசி சேவை அறிமுகம்

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களமும் அவசர தொலைபேசி சேவையொன்றினை அறிமுகம் செய்துள்ளது.

1962 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தத் தொலைபேசி சேவையின் ஊடாக கடவுச்சீட்டு உள்ளிட்ட குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் சேவைகள் தொடர்பில் அறிந்து கொள்ளமுடியும். (அ-2)




நெல்லியடி/ கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தில் ஊழியர்களுக்கான கௌரவிப்பும் பரிசளிப்பு விழாவும் தலைவர் செல்வராசா தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது.

(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படங்கள்:உடுப்பிட்டி செய்தியாளர்

உடுப்பிட்டி தென் இந்திய திருச்சபை முன்பள்ளியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களுக்கு உடுப்பிட்டி மக ளிர் கல்லூரி அதிபர் பரிசில்கள் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வு இடம் பெறுவதையும் படங்களில் காணலாம்.



பாராளுமன்ற உறுப்பினர்களால் ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டி லிருந்து சனசமூக நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் (காசோலைகள்) வேலணை பிரதேச சபை தவிசாளர் சின்னையா சிவராசா (போல்) அவர்களினால் சனசமூக நிலைய தலைவர் செயலா ளர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் மண்டைதீவு உதயசூரியன் சனசமூக நிலைய நிர்வாகத் தினரும் அம்பிகைநகர் சனசமூகநிலைய நிர்வாகத்தினரும் கலந்துகொண்டனர்.





வடமராட்சி லயன்ஸ் கழகம் அண்மையில் புலோலி மேற்கு சதாவதானி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தில் பயனாளி ஒருவருக்கு தென்னங்கன்று விநியோகிப்பதை படத்தில் காணலாம். (படம்: பருத்தித்துறை செய்தியாளர்)





யாழ். கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள ஸ்ரீ கல்கி இல்லத்தில் அண்மையில் நடத்தப்பட்ட ஒளி விழாவின் போது நிகழ்வில் பங்குபற்றியவர்களுக்கு பரிசில் வழங்கு வதையும் மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.





படங்கள்: தும்பளை செய்தியாளர்

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற 51 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் டாக்டர் எஸ்.சுந்தர மூர்த்தி உரையாற்றுவதையும் பரு.இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.தர்மராஜா உரையாற்றுவதையும் நாடகத்தின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம்.



படங்கள்: தும்பளை செய்தியாளர்



கச்சாய் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கவிஞர் தகநவரட்ணம் அவர்களை சாவகச்சேரி பிர தேச சபை தவிசாளர் சி.துரைராஜா பொன்னாடை போர்த்தி கௌர விப்பதையும் லண்டனில் உள்ள நலன் விரும்பி சேமதீஸ்வரன் சார் பாக ஐ.சின்னையா கணனி ஒன்றை அன்பளிப்பு செய்வதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் வழங்க கோரி மாமூலை கிராம மக்கள் கவனயீர்ப்பு

முல்லை. மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாமூலை கிராம மக்கள் மின்சாரத்தைப் பெற்றுத்தரு மாறு கோரி நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை முல்லைத்தீவு மின்பாவனையாளர் சேவை நிலையத்தின் வளாகத்தினுள் கவன யீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தோடு போராட்டத்தில் ஈடுபட்ட மக்களி னால் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங் கள் வருமாறு,

மாமூலை கிராமம் கடந்த 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டு 4 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை மின்சார வசதிகள் ஏற்படுத்தித் தரவில்லை.

இந்நிலையில் மின்சாரத்தை வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பலருக்கு கடிதம் ஊடாக கோரிக்கை விடுத்தும் பயன் ஏதும் கிடைக்க வில்லை.

அதன்பின்னர் முல்லைத்தீவு மின்சார சபையினருடனும் வடக்கின் வசந்தம் வவுனியா அலுவலகத்தினருடனும் பல தடவைகள் சென்று கதைத்தன் பயனாக வடக்கின் வசந்தம் அலுவலகத்திலிருந்து 3 தடவைகள் வந்து பார்வையிட்டனர்.

ஆயினும் அவர்கள் வீதி புனரமைக்கப்படா மையால் வாகனம் கொண்டு வருவது சிரமம் என கூறியபோது பொதுமக்கள் வீதியை சீர் செய்து தருவதாகத் தெரிவித்து வீதி கிரவல் இடப்பட்டு சீரமைத்துள்ளனர்.

• ஆனால் 5 மாதங்கள் கடந்துள்ளபோதி லும் மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்பட வில்லை.

இவ்வாறாக மின்சாரமின்மையால் நெ(ன)ன சல நிறுவனத்தினரின் 15 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டினூடாக வழங்கப்பட்டிருந்த கணனி பயிற்சி நிலையம் அமைத்துக் கொடுக்கப்பட வில்லை.

இக்கிராமத்தில் சுமார் 345 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் இதில் வசதி படைத்த 75 இற்கும் குறைவானவர்களுக்கே மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

மின்சாரத்தை இதுவரை பெறாத குடும்பங் கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மிகவும் வறுமையின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் கணவனை இழந்தவர்கள், மாற்றுவலுவுடையோர், பணம் கொடுத்து மின்சாரம் பெறக்கூடிய வசதிகளற்றவர்களே அநேகமாகவுள்ளனர்.


எனவே இக்கிராம மக்களின் வாழ்வாதார நிலையைக் கருத்திற்கொண்டு மின்சாரம் வழங்கவேண்டுமென அதில் மேலும் குறிப்பி டப்பட்டுள்ளது.

மேற்படி மகஜரின் பிரதிகள் முல்லை அரசாங்க அதிபர், வடக்கின் வசந்த திட்ட முகா மையாளர், முல்லைத்தீவு மின் அத்தியட்சகர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட மின்சார சபையின் மின் அத்தியட்சகர் ப.செந்தில் நாதன் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னர் தீர்வைப் பெற்றுத்தருவதாக கூறியதையடுத்து போரா ட்டம் கைவிடப்பட்டுள்ளது. (அ-9-267)

# கிளி, முல்லை இந்து ஆலயங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிதியுதவி





(முல்லைத்தீவு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணை க்களத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியை, பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முல்லை. மாவட்டத்திற்குட்பட்ட 31 இந்து ஆலயங்களின் புனரமைப்பிற்காக வழங்கியுள்ளார்.

இந்நிதி கையளிக்கும் நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலர் நா.வேதநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிதி முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்த த்தினால் சேதமடைந்த இந்து ஆலயங்களின் புனரமைப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் புதுக்குடியிருப்பு பிர தேச செயலர் பிரிவில் 19 இந்து ஆலயங்களு க்கும் ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தலா 3 இந்து ஆலயங்களுக்கும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 5 ஆலயங்களுக்கும் மாந்தை கிழக்கில் ஒரு ஆலயமுமாக மொத்த மாக 31 ஆல யங்களின் புனரமைப்புக்காக தலா 2 இலட் சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் முல்லை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர்,முல்லை. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், கரைதுறைப்பற்று பிரதேச செயலர், ஈ.பி.டி.பி கட்சியின் மாவட்ட அமைப்பாளர், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் என பலர் கொண்டனர்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 30 ஆலயங்களின் புனரமைப்பிற்காக வழங் கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் உள்ள ஏனைய ஆலயங்களின் புனரமைப்பிற்காக 7.8 மில் லியன் ரூபா நிதி ஏற்கனவே வழங்கப்பட்டு ள்ள நிலையிலேயே இன்று மேலும் 60 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு புறம்பான பிரதேசங்க ளாக காணப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 300இற்கும் மேற்பட்ட ஆலயங்களுக்கு நாம் நிதியொதுக் கீடுகளை செய்திருந்தோம்.

இன்றைய சூழலிலும் யுத்தத்தால் பாதிப் படைந்த இந்து ஆலயங்களை மீளக்கட்டி யெழுப்பும் பணிக்கு அரசு தனது பங்களி ப்பை வழங்கி வருகின்றது.

அதனடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்த நிதி ஆலயங்களை புனரமைப்பதற்கு போதுமானது என நாம் கருதவில்லை. இருப் பினும் இவ் ஆலய புனரமைப்பிற்காக மேல திக நிதி வளங்களை பெற்றுத் தருவதற்கும் நாம் முயற்சித்து வருகின்றோம். அந்த வழி வகைகளை சாத்தியப்படுத்துமிடத்து ஆல யங்களின் வளர்ச்சிக்கு மேலதிக உதவிகளை யும் எம்மால் வழங்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-9-267)

## வரவு செலவு திட்டம் நிறைவேற்றம்

(பூந்தோட்டம்)

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் ஆளுகை க்குட்பட்ட செட்டிகுளம் பிரதேசசபையின் வரவு செலவுத்திட்டம் அனைத்து உறுப்பின ர்களின் ஆதரவுடன் கடந்த 30 ஆம் திகதி திங்கட்கிழமை நிறைவேற்றப்பட்டுள்ளது.

செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழ் தேசி யக்கூட்டமைப்பின் 5 உறுப்பினர்களும் ஐக் கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் 4 உறுப் பினர்களுமாக 9 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இந் நிலையில் பிரதேச சபையின் தலை வர் கப்ரியல் அந்தோனியால் வரவுசெலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டபோது ஏகமனதாக அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக்கொண் டிருந்தனர்.

இதேவேளை வவுனியாவில் உள்ள 4 பிரதேசசபைகளில் 3 சபைகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்டுள்ள நிலையில் வரவு செலவுத்திட்டம் முன்வைக் கப்பட்டுள்ள இரண்டு சபைகளில் வரவு செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது. (அ-9-266)




## அட்டமஸ்கட பிக்கு பிணையில் விடுதலை

வவுனியா,அட்டமஸ்கட சிறுவர் இல்லத் தில் இடம்பெற்றதாக கூறப்படும் சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த பிக்கு நேற்று முன்தினம் பிணையில் விடுதலை செய்யப்ப ட்டுள்ளார்.

சிறுவர் இல்லத்திலிருந்த சிறுவன் ஒருவன கடந்த நவம்பர் மாதம் 6 ஆம் திகதி செய்த முறைப்பாட்டின் பிரகாரம் குறித்த பிக்கு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்தே அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தின் காப்பாளரும் விகாராதிபதியு மான கல்யாணதிஸ்ஸ தேரர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். அவருக்கே நேற்று முன்தினம் பிணை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினரின் அறிக்கையின் பிரகாரம் சட்டமா அதிபர் பிணை வழங்குவதற்கு ஆட்சேபம் இல்லை என தெரிவித்ததை அடுத்தே வவுனியா நீதிமன்ற நீதவான் இராமக்கமலன் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் அவரை விடுதலை செய்தார். (அ-9-250)

## மரக்கூட்டுத்தாபன திறப்பு விழா

(ஒட்டுசுட்டான்)

சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு, அரசாங்க மரக்கூட்டுத்தாபனம், உதவி பிரதேச காரியாலயமும் மரவிற்பனை நிலையமும். ஒட்டுசுட்டான் அரசாங்க மரக் கூட்டுத்தாபன வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வன்னிப் பிரதேச மக்களின் கட்டுமான மரத் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இக் காரியாலயங்கள் முல்லைத்தீவு மாங்குளம் வீதி, ஒட்டுசுட்டான் எனும் முகவரி யில் இன்று வியாழக்கிழமை காலை 11 மணி க்கு திறந்து வைக்கப்படவுள்ளன. (அ-2)

## உப உணவு உற்பத்தியில் மக்கள் ஆர்வம் செலுத்த வேண்டும்

வவுனியா மாவட்டத்தில் கடும் வரட்சி நிலவுவதனால், உப உணவு உற்பத்தியில் மக்கள் ஆர்வம் செலுத்த வேண்டும் என வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தில கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலந் துரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வரட்சியான காலநிலை நெல் உற்பத்தி யாளர்களை பெரிதும் பாதிப்படையச் செய்து ள்ளது. அவர்களின் சேமிப்பில் இருந்த நெல் லும் தற்போது வயல்களில் விளைச்சலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில், பஞ்சம் ஏற்படும் வாய்ப்பும் உருவாகலாம். எனவே முன்னெ[illegible] பயிர்ச்செய்கைகளை [illegible] வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் மக்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கி ஊக்கப்படுத்த வேண்டும்.

தற்போது விவசாயத் திணைக்களத்துடன் வவுனியா வடக்கு பிரதேசத்தின் நிலைமை கள் தொடர்பாக கலந்துரையாடியதன் அடிப் படையில், சோளம் மற்றும் மரவள்ளி உற் பத்திகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டு இந்த உப உணவு உற்பத்திகளுக்கு நிதி மற்றும் ஏனைய மூலப்பொருட்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கள் மூலம் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். எனவே இந்தச் செயற்பாட்டை சிறப்பாக முன் னெடுப்போமாக இருந்தால் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராமங் களின் உணவுக்கு பஞ்சம் ஏற்படாது தவிர்க்க வழி ஏற்படும் என்றார். (அ-9-250-266)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதானம்,சகிப்புத்தன்மை, கருணை ஆகியவற்றில் அடங்கியதே விவேகம்.

– ஸரதுஸ்திரர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மலர்ந்துள்ள புத்தாண்டில் தமிழர் தம் ஒற்றுமைக்கு முன்னுரிமை கொடுங்கள்

2014–ம் ஆண்டு மலர்ந்து விட்டது. ஈழத் தமிழ் மக்கள் தங்கள் உரிமையை வென்றெடுக்கக் கூடியதான ஒரு சூழ்நிலையில் புதிய ஆண்டின் பிறப்பு நடந்துள்ளமை ஆறுதலைத் தருகின்றது.

எனினும் விளைச்சலைப் பெற்றுக் கொள்ளும் வரை நாம் மிகவும் நிதானமாகச் செயற்படுவது அவசியமானது.

அதிலும் குறிப்பாக தமிழர் தரப்பில் கடுமையான ஒற்றுமை முயற்சிகள் தேவைப்படுகின்றது என்பதை இவ்விடத்தில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

ஈழத்தமிழர்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் கரிசனை கொண்டுள்ளது. ஜெனிவாவரை எங்கள் விவகாரம் சென்றுவிட்டது என்பதற்கு அப்பால், மூன்றாவது தடவையாக ஜெனிவாவில் போர்க் குற்றச்சாட்டுத் தொடர்பான விடயம் பேசுபடு பொருளாக இருக்கப் போவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எங்கள் விவகாரம் ஜெனிவாவரை சென்று சர்வதேசத்தின் முகத்தை எங்கள் பக்கம் திருப்பி விட்டதில் எங்கள் புலம்பெயர் உறவுகளின் பங்கும் நாடுகடந்ததமிழர் அமைப்புகளின் கடின முயற்சியும் மகத்தான வகிபாகத்தை கொண்டுள்ளன.

இது தவிர; உள்நாட்டிலும் அரசியல் பதவியை விரும்பாத, தமிழ்ப் பற்றுள்ள புத்திஜீவிகளின் வெளிநாட்டுப் பயணங்களும் அவர்களின் கருத்துரைப்புகளும் கனதியான பங்கை வகித்துள்ளது என்பதை எவரும் மறந்து விடக்கூடாது.

நிலைமை இதுவாக இருக்கும் போது இலங்கை அரசுமீதான சர்வதேச அழுத்தத்திற்கு நாங்களே காரணம் என உரிமை கோருவது மிகப்பெரும் தவறு.

எங்களுக்குத் தேவை தமிழ் மக்களுக்கான உரிமை. எனவே இதுவிடயத்தில் என்னால்தான் நடந்தது என்ற உரிமைகோரல் அவசியமற்றது. மாறாக நாங்கள் செய்தோம் என்ற பொதுமைக்கு இடம்கொடுக்கவேண்டும்.

எய்தவன் இருக்க அம்பை நோவது எத்துணை தவறோ, அதுபோல கடும் முயற்சி செய்தவர்கள் இருக்க, எதுவும் செய்யாதவர்கள் உரிமை கோருவதும் மகாதவறு.

அதே சமயம் கடுமையாகப் பாடுபடுபவர்கள் அமைதியாக இருக்க, எதுவும் செய்யாதவர்கள் சலசலப்பது, எங்கள் ஒற்றுமைக்குப் பாதகமாக அமையும்.

காவலுக்காகக் குரைக்கும் நாய்களிடம் நன்றி மிகுந்துள்ளதாயினும் அவை தம்மின ஒற்றுமைக்கு செய்கின்ற நாசங்கள் ஏராளம்.

இரண்டு நாய்கள் இருக்கும் இடத்தில் ஒரு உணவுப் பாசலை வைத்துப் பாருங்கள். அவை இரண்டும் ஒன்றை ஒன்றை கடித்து குதறிக் குரைத்து பெரும் சண்டையிடுமே அன்றி, அந்த உணவைப் பகிர்ந்து உண்பதில்லை. கூடவே நாய்கள் தெருவில் நின்று போகம் புரிந்து துன்பங்காணும் செயலை மற்றவரும் கண்டு நாணு மளவில் நடந்து கொள்ளும்.

இதனால்தான் நாய்ப்பிறப்பு உலகில் கடைப் பிறப்பாக கணிக்கப்படுகின்றது.

ஆனால் காகம் இருக்கின்றதே! அவை தம் இனத்தின் மேல் மிகுந்த பாசம் கொண்டவை. ஒருகாகம் உணவைக் கண்டால் குரல் எழுப்பி தன் சகாக்களையும் அழைத்து அந்த உணவை பகிர்ந்து கொள்ளும்.

அது மட்டும் அல்ல, தன் இனத்தில் ஒருவர் இறந்து விட்டால் போதும், அந்த இடத்தில் எல்லாக் காகங்களும் கூடி நின்று அழுது புலம்பி அஞ்சலி செய்யும்.

அதேநேரம் காகங்கள் மற்றவர்கள் முன் மருந்துக்கும் போகம் புரியாமல் பிறர் காணாமலே புணரும் உயர் பண்புடையவை. ஆக, காகக் கூட்டங்களில் இருந்து நாம் கன விடயங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

அதில் முக்கியமானது ஒற்றுமையும் ஆபத்து வரும் வேளையில் நின்று உதவும் பெருந்தன்மையுமாகும்.

# அட்டவணைப்படுத்தப்படாத சிற்றூழியர்களது கல்வித் தகைமைகளை தெரியப்படுத்துங்கள்

## அகில இலங்கை பொது ஊழியர் சங்கம் கடிதம்

அட்டவணைப் படுத்தப்படாத சிற்றூழியர்களது கல்வித்தகைமை தொடர்பாக அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் வட மாகாணத்திலுள்ள மாநகர சபை, நகர சபை, பிரதேச சபைகளில் கடமை புரியும் அட்டவணைப் படுத்தப்படாத சிற்றூழியர்கள் எதிர் நோக்கும் கஷ்டங்கள் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் உள்ளமையைக் குறிப்பிட்டு வட மாகாண ஆளுநர், முதலமைச்சர், அவைத்தலைவர், ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம் ஆகியவற்றுக்கும் வவுனியா நகர சபை தவிசாளர், செயலாளர் ஆகியவற்றுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அதில் உள்ள விடயங்கள் வருமாறு; அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் வட மாகாணத்திலுள்ள மாநகர சபை, நகர சபை, பிரதேச சபைகளில் கடமை புரியும் அட்டவணைப் படுத்தப்படாத சிற்றூழியர்கள் எதிர் நோக்கும் கஷ்டங்கள் நீண்ட காலமாக நிரந்தர நியமனமின்றி நாட்சம்பள அடிப்படையில்கடமைபுரிதல், இவர்களது கல்வித் தகைமை ஆகக் கூடியது எட்டாம் தரமாக இருத்தல் வேண்டும். என்றும் அதன் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்கப்படும் போது உரிய சபைகள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டுமென்றும் தாங்கள் உள்ளூராட்சி சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை 01/86 மற்றும் 2002.03.30–ம் திகதி 1229/17 இலக்க அ.வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் கவனத்தில் கொள்ளப்படும்.

இதன் பிரகாரம் கல்வித்தகைமை 8–ம் தரம் சித்தி போதுமானதாக கருதப்படும்.சேவை மூப்பு அடிப்படையிலும் PAC 20/2009 விதிமுறைமைகளும் கவ னத்தில் கொள்ளப்பட்டு உரிய சபைகள் செயற்படுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் தெளிவாக 2013.04.23–ம் திகதி நடைபெற்ற தொழிற்சங்க பேச்சுவார்த்தையின் போது சுட்டிக் காட்டியிருந்தோம்.

தாங்கள் எமது கோரிக்கையை ஏற்று இவ்விடயம் தொடர்பாக கௌரவ ஆளுநர் தலைமைச் செயலாளர் கவனத்திற்கு தெரியப்படுத்தி இவ்விடயத்திற்கு உதவுவதாக தெரியப்படுத்தியிருந்தீர்கள். ஆனால் இது காலவரை எவ்வித பதிலும் எமக்கு கிடைக்கவில்லை என்பதனை கவலையுடன் தங்களது கவனத்திற்கு கொண்டுவருகின்றோம்.

மேலும் அலுவலகப் பணியாளர் சேவைசார்ந்த ஊழியர்களுக்கு அ.வ. இல:1258/20 மற்றும் அ.வ.இல: 1777/35–ல் கோரப்பட்டுள்ள க.பொ.த (சா/த) பரீட்சையில் 6 பாடம் சித்தியடைந்திருக்க வேண்டும் என்ற விதிமுறை அட்டவணைப்படுத்தப்படாத சேவையின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களில் சுகாதாரப் பணியாளர் சுத்திகரிப்பு தொழிலாளி, வேலைத் தொழிலாளி மற்றும் தொழிலாளி தரங்களில் வகுப்பு III–ல் கடமைபுரிகின்ற ஊழியர்களுக்கு ஏற்புடையதல்ல என்பதனை தெளிவாக சுட்டிக் காட்டியிருந்தோம்.

மேலும் இவ்வாறான சூழ்நிலை கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு ஏற்பட்ட போது நாம் தெளிவுபடுத்தியிருந்தோம். இதன் உண்மை தன்மையை ஏற்றுக் கொண்ட உள்ளூராட்சி திணைக்களம் உள்ளூராட்சி அமைச்சு 8–ம் தரம் அடிப்படையாக கொண்டு ஊழியர்களை நிரந்தரமாக்கி வருவதையும் தங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

வவுனியா சபையினரின் கவனத்திற்கு நாம் தொழிற்சங்க பேச்சுவார்த்தையின் போது கல்வி தகைமை 8–ம் தரம் கவனத்தில் கொள்ளப்பட்டு சிறு பணியாளர்கள் அவர்களது சேவை மூப்பின் அடிப்படையில் வெற்றிடத்துக்கு உள்வாங்கப்பட்டு நிரந்தரமாக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் தெரியப்படுத்தியிருந்தோம் . சில சபைகள் எடுக்கின்ற பொருத்தமற்ற நடவடிக்கையின் காரணமாக ஊழியர்கள் சாத்வீகப் போராட்டத்தில் திடீரென ஈடுபடுகின்றனர். இதன் காரணமாக மக்கள் பாதிக்கப்படுகின்றனர். தயவு செய்து நாம் தெரிவிக்கின்ற இவ் விடயங்களை தாங்கள் உள்வாங்கி தங்களது பதிலை காலம் தாழ்த்தாது தந்துதவுமாறு பணிவாக கேட்டுக் கொள்கின்றேன். ஊழியர்களது கல்வித் தகைமை தொடர்பில் சபைகளுக்கு தெரியப்படுத்தப் படல்வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ–2)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவன் அம்மன் (ரயில்வே ஸ்ரேஷன் முன்பாக) கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரையும் இதில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2)

# வரவு-செலவு திட்டம் நிறைவேற்றம்

(பூநகரி)

பூநகரி பிரதேச சபையின் இவ்வாண்டிற்கான வரவு செலவுத்திட்ட விவாதம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மூன்றாவது தடவையாக சபையில் வாசிக்கப்பட்டு நான்கு உறுப்பினர்களின் எதிர்ப்பின் மத்தியில் ஒரு மேலதிக வாக்கினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எதிர்த்து வாக்களித்த 4 உறுப்பினர்களும் கருத்து வெளியிடுகையில், தாங்கள் இரு தடவை வாசிப்பின் போதும் சொல்லப்பட்ட திருத்தங்கள் இன்னும் ஏற்றுக் கொள்ளப் படாமையால் தாம் எதிர்த்து வாக்களித்தோம் என்றனர்.

இதில் 5 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 4 உறுப்பினர்கள் எதிர்த்தும் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-9-84)

✦✦✦✦✦✦✦✦

(மல்லாவி)

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கீழுள்ள கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேசசபையில் இவ்வாண்டுக்கான வரவு செலவுத்திட்ட விவாதம் கடந்த திங்கட்கிழமை சபையின் ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்ற போது ஆளும் கட்சி எதிர்க்கட்சியின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தவிசாளர் நா.வை.குகராசா தெரிவித்துள்ளார்.

இவ்வருட வேலைத்திட்டத்திற்காக 101 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியில் 62 மில்லியன் ரூபா திட்டச் செலவுகளுக்கும் புனரமைப்பு, பராமரிப்பு வேலைகளுக்காகவும் 39 மில்லியன் ரூபா சமூக அபிவிருத்திக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சமூக அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதி பிரதேச சபையின் 18 உறுப்பினர்களுக்கும் தலா 2 மில்லியன் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அவர்கள் ஊடாக கிராம அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-3-15)


# சத்திய தரிசனம்



நாங்கள் ஒரு அவதார காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எம்முடன் ஒரு அவதாரம் வாழ்ந்து வழிகாட்டியுள்ளது. இந்த உண்மை எம்மில் பலருக்குத் தெரியாது. சிலருக்கு நம்ப முடியாமலும் இருக்கிறது. இந்த அவதாரங்கள் தோன்றிய காலங்களிலெல்லாம் இப்படியான துரதிர்ஷ்டசாலிகள் இருந்திருக்கிறார்கள்.

இலங்கையில் விபீஷணன் குடும்பத்தைத் தவிர ஏனையோருக்கு இராமர் அவதாரமாகத் தெரியவில்லை. கிருஷ்ண அவதாரத்தில் பஞ்சபாண்டவர் மற்றும் சிலபேரைத் தவிர மற்றவர்களுக்கு கிருஷ்ணர் அவதாரமாகத் தெரியவில்லை. இயேசுநாதர் காலத்தில் அவரை இறைதூதன் என்று புரிந்து கொள்ளமுடியாமல் சிலுவையில் அறைந்தார்கள். புத்தபெருமானின் மகிமை தெரியாமல் நடந்து கொண்டார்கள். முகமது நபி பெருமானாரை மக்காவிலிருந்து மதீனா நகருக்கு கற்களை வீசித் துரத்தினார்கள்.

இன்று சத்திய சாயி அவதாரம் மிக உயர்ந்த பூரண அவதாரம். முன்னைய அவதாரங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட விடயங்களை ஊக்குவித்தன. ஆனால் சாயி அவதாரம் உலக மக்கள் எல்லோரையும் அன்பு என்னும் மதத்தில் ஆனந்தம் பெற வழிகாட்டியது.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## முன்னேற ஒரே ஒரு வழி

முன்னேற்றம் என்ற கட்டடத்துக்கு அத்திவாரம் போன்றது தெய்வ நம்பிக்கை. அந்த நம்பிக்கை எமது சமுதாயத்தில் குறைந்து போவதன் பலனாகத்தான் நாம் பல விதமான இன்னல்களையும் இடர்பாடுகளையும் சந்தித்து வருகின்றோம்.

காற்றைக் கண்ணாற் காணமுடியாது. அது உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாததாய் இருப்பதுபோல் இறைவனும் இறைசக்தியும் எமக்குத் தேவை. அடையாளம் காட்டுவது சிரமமாக இருந்தாலும் இறைவன் என்ற ஒருவன் நமக்குத் தேவையானவரே. அவர் தேவை என்ற காரணமே உண்மை என்பதை எமது நடைமுறை வாழ்க்கையில் நாம் உணருகின்றோம்.

ஆனாலும் பட்டம், படிப்பு ,பொருளாதாரம் என்று நாம் வாழ்க்கையில் உயரும் போது நான்தான் பெரியவன் என்ற மமதை கொண்டு நடக்கின்றோம். அந்நிலையில் இறை நம்பிக்கை இருக்குமானால் நாம் ஒவ்வொருவரும் உயர்ந்தவர்களாவோம். இறை நம்பிக்கை இல்லாவிட்டால் நம் சொந்த வாழ்விலும் சரி நம் சமுதாய வாழ்விலும் சரி முன்னேற முடியாது.

நன்றி: ஞானச்சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணம்; யாழ்.ஜொனியன்ஸ் முதல் இடம்






1 ↑

யாழ்.சென்றல் வி.க. தனது 12ஆவது அகவையில் ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணம் 2013 இல் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவில் யாழ்.ஜொனியன்ஸ் வி.க. 32 போட்டிகளில் 24 போட்டிகளில் வெற்றிபெற்று 160.9 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் உள்ளது.

மானிப்பாய் பரீஸ் வி.க. 25 போட்டிகளில்

3 →




↑ 2

18 போட்டியில் வெற்றிபெற்று 124.8 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும் யாழ்.சென்றல் வி.க. 23 போட்டிகளில் 16 போட்டியில் வெற்றி பெற்று மூன்றாமிடத்திலும் உள்ளது.

2010, 2011 - ஆண்டு கழக அணித் தெரிவில் யாழ்.பல்கலைக்கழகமும் 2012 ஆம் ஆண்டு கொக்குவில் K.C.C.C. வி.கழகமும் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது. (க)

## அப்ரிடியின் சாதனையை முறியடித்தார் அன்டர்ஸன்



ஒருநாள் கிரிக்கெட்டில் குறைந்த பந்துகளில் (36) சதமடித்து சாதனையை நிலைநாட்டியுள்ளார் நியூஸிலாந்து அணியின் கொரே அன்டர்ஸன்.

1996ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் அணியின் சயிட் அப்ரிடி குறைந்த பந்துகளில் (37) சதமடித்த சாதனையை நிலைநாட்டியிருந்தார்.

அந்தச் சாதனையையே கொரே அன்டர்ஸன் நேற்று முறியடித்தார்.

நியூஸிலாந்து குயின்ரவுடன் மைதானத்தில் நடைபெற்ற மேற்கிந்திய தீவுகள்- நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேச போட்டியிலே இந்தச் சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது.

மழை காரணமாக இப்போட்டி 21 ஓவர்களைக் கொண்டதாக நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி; மத்திய கல்லூரி வெற்றி



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 5 விக்கெட்டுக்களினால் விக்ரோறியன்ஸ் அணியினை வெற்றியீட்டியுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியின் 19 வயது பிரிவு அணிக்கும் சுழிபுரம் விக்டோரியன்ஸ் விளையாட்டு கழக அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி கடந்த திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோரியன்ஸ் விளையாட்டு கழக அணி 23.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அரிதரன் 18, கணேஸ் 14 மற்றும் சஜந்தன் 13 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பாக அலைன்ராஜ் 6 (05), யூலியஸ் கலிஸ்ரன் 2 (11) விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 26 ஓவரில் எதிர்கொண்டு ஐந்து விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 73 என்ற வெற்றி இலக்கினை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் டினேதஜன் 16, சங்சஜன் 12, நிரோஜன் 12 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பாக சுரேந்திரன் 2 (14) விக்கெட்டுக்களை கைப்பற்றினார். (க-23)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

## காற்பந்தாட்ட போட்டி முடிவுகள்



அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக்கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட ஆதரவுடன் உழவர் திருநாளையொட்டி அணிக்கு 07 பேர் கொண்ட காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டியினை நடத்தி வருகின்றது.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் வருமாறு.

நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் துணவி சென்.றியூஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில், சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணிக்கும் மூளாய் வளர்மதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில், விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (க)

## நியூசிலாந்து தொடரில் யுவராஜ் நீக்கம்



நியூசிலாந்து அணிக்கு எதிரான இந்திய அணியில் யுவராஜ் சிங் நீக்கப்பட்டுள்ளார்.

இம் மாதம் நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ள இந்திய அணி, 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேறக உள்ளது.

இவ்விரு அணிகளும் மோதும் முதல் போட்டி ஜனவரி 19ஆம் திகதி நேப்பியரில் தொடங்க உள்ளது.

டெஸ்ட் தொடரின் முதல் போட்டி ஆக்லாந்தில் பெப்ரவரி 6ஆம் திகதி தொடங்குகிறது.

இந்த தொடரில் விளையாட உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

நியூசிலாந்து தொடர்; இந்திய அணி

| அணி விபரம்: | டெஸ்ட் அணி விபரம்: |
|---|---|
| டோனி(அணித்தலைவர்), ஷிகர் தவான், ரோஹித் ஷர்மா, விராட் கோஹ்லி, ரஹானே, அம்பதி ராயுடு, சுரேஷ் ரெய்னா, ரவிச்சந்திரன அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, புவனேஷ்குமார், முகமது சமி, இஷாந்த்சர்மா, அமித்மிஸ்ரா, இஷ்வர் பாண்டே, வருண் ஆரோன், ஸ்டுவர்ட் பின்னி. | டோனி(அணித்தலைவர்), ஷிகர் தவான், முரளி விஜய், புஜாரா, விராத் கோஹ்லி, ரகானே, ரவீந்திர ஜடேஜா, சாகிர் கான், முகமது ஷமி, இஷாந்த் சர்மா, அம்பதி ராயுடு, புவனேஷ்வர் குமார், அஷ்வின், உமேஷ் யாதவ், சகா, ஈஸ்வர் பாண்டே. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்டர்ஸன் ரைடர் சதம்

# கரீபியன் அணியை வீழ்த்தி நியூசிலாந்து அபார வெற்றி




நியூசிலாந்து- வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதும் 3-வது ஒருநாள் போட்டி குயன்ஸ்டவுனில் நேற்று நடந்தது. மழையால் ஆட்டம் 21 ஓவர்களாக குறைக்கப்பட்டது. 'டாஸ்' வென்ற வெஸ்ட் இண்டீஸ் கப்டன் பிராவோ நியூசிலாந்தை முதலில் துடுப்பொடுத்தாட அழைத்தார்.

நியூசிலாந்து வீரர் கோரி அன்டர்ஸன் இந்த போட்டியில் புதிய உலக சாதனை படைத்தார். 36 பந்தில் அவர் சதம் அடித்து அப்ரிடியின் சாதனையை முறியடித்தார். பாகிஸ்தான் வீரர் அப்ரீடி 1996-ம் ஆண்டு இலங்கைக்கு எதிரான நைரோபியில் நடந்த போட்டியில் 37 பந்தில் சதம் அடித்தே சாதனையாக இருந்தது.

அவரது 18 ஆண்டு கால சாதனையை கோரி அண்டர்சன் புத்தாண்டு தினமான நேற்று முறியடித்தார். அவரது சதத்தில் 12 சிக்சர்களும், 4 பவுண்டரிகளும் அடங்கும்.

இந்தப்போட்டியில் நியூசிலாந்து அணியின் தொடக்க வீரர் ஜெசி ரைடரும் சதம் அடித்தார். அவர் 46 பந்தில் 12 பவுண்டரி, 5 சிக்சருடன் 100 ரன்னை தொட்டார்.

நிர்ணயிக்கப்பட்ட 21 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 283 ரன் குவித்தது. கோரி அண்டர்சன் 47 பந்தில் 6 பவுண்டரி, 14 சிக்சருடன் 131 ரன் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார். ரைடர் 51 பந்தில் 12 பவுண்டரி, 5 சிக்சருடன் 104 ரன் எடுத்தார்.

பின்னர் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணியால் 5 விக்கெட் இழப்புக்கு 124 ரன்களே எடுக்க முடிந்தது. இதனால் நியூசிலாந்து 159 ரன்னில் அபார வெற்றி பெற்றது.




இப் போட்டியின் ஆட்ட நாயகனாக நியூசிலாந்து அணியின் அன்டர்ஸன் தெரிவானார்.

## தமிழீழம் அமைவது...

அவர்கள் மிகக் குரூரமாகத் தங்கள் முகத்தை வெளிப்படுத்தினார்கள். ஏனைய ஆயுதக் குழுக்கள், போராட்டத் தலைவர்கள் எல்லோரையும் அழித்தொழித்தார்கள். பின், வெவ்வேறு கால கட்ட உரையாடல்களின்போது பிரபாகரனின் அரசியல் அறியாமையும் அவருடைய நோக்கங்களும் புரிந்து விட்டன.

துப்பாக்கிகள் மீது அவருக்கு இருந்த நம்பிக்கையில் துளியும் பேச்சுவார்த்தைகளிலோ ஜனநாயகத்திலோ இல்லை. ராஜீவ் -ஜெயவர்த்தனே ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளின்போதே இது எனக்குத் தெளிவாகிவிட்டது. தொடர்ந்து அவர்கள் நடத்திய அரசியல் படுகொலைகள், செய்த அட்டூழியங்கள், பேச்சுவார்த்தைகளில் அவர் வீணடித்த பொன்னான வாய்ப்புகள், எல்லாவற்றுக்கும் மேல் முன்னாள் பிரதமர் ராஜீவ் படுகொலை,புலிகளை எதிர்த்து எழுத இவை எல்லாம்தான் காரணங்கள். புலிகள் எதிர்ப்பு என்பது எப்படி இலங்கைத் தமிழர்கள் அல்லது தமிழ் விரோதப் போக்காகும்?

எது உண்மையில் சாத்தியமோ, எது உண்மை நிலையைப் பிரதிபலிக்கிறதோ அதையே எழுதுகிறோம். போலித்தனமோ, இரட்டை வேடமோ போடுவது இல்லை.

**கேள்வி:** புலிகள் எதிர்ப்பு தான் தமிழீழ எதிர்ப்பாகவும் உருவெடுத்ததா?

**பதில்:** இல்லை. தொடக்கம் முதலே 'த இந்து' தனித் தமிழீழம் என்ற கருத்தாக்கத்தை எதிர்த்தே வந்திருக்கிறது. இந்தியாவின் அயலுறவுக் கொள்கையும் அதுதான். அரசியல் சாத்தியமே இல்லாதது தமிழீழம். அது அமைந் தால் நல்லதும் அல்ல.

**கேள்வி:**தமிழீழம் சாத்தியம் இல்லை நல்லது இல்லை என்று எந்த அடிப்படையில் சொல்கிறீர்கள்?

**பதில்:** அடிப்படையிலேயே இனவாதக் கோரிக்கை அது. இங்கிருந்து நாம் இலங்கைத் தமிழர்கள் என்ற சொல் வழியே பார்க்கும் மக்கள் வேறு அங்குள்ள மக்கள் வேறு. மலையகத் தமிழர்கள் தனித்திருக்கிறார்கள், தமிழ் பேசும் முஸ்லிம்கள் தனித்திருக்கிறார்கள் அவர்களுடைய பிரச்சினைகள் இங்கு பேசப்படுவது இல்லை. ஈழத்தின் பரப்பாகக் கேட்கப்பட்ட வட-கிழக்கு மாகாணங்களை எடுத்துக் கொண்டால் கிழக்கு மாகாணத்தில் மூன்றில் இரு பங்கினர் தமிழர் அல்லாதவர்கள் வட பகுதியோடு இணைவதில் விருப்பம் இல்லாதவர்கள் அவர்களுடைய நியாயங்களை விவாதிக்க இங்கு அனுமதிக்கப்படுவதுகூட இல்லை.

அப்புறம் அரசியல்ரீதியாக, பொருளாதாரரீதியாக, புவியரசியல் ரீதியாக நீடிக்க வாய்ப்பே இல்லாதது அது. முக்கியமாக வியூக முக்கியத்துவம். அந்தப் பகுதியை ராணுவரீதியாக யாரும் விட்டுவைக்க மாட்டார்கள் - ஒருபோதும் அது நீடிக்க முடியாதது. கடைசியில் அதுதான் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்பின் கீழ், சுயாட்சிக்கு இணையான உச்சபட்ச அதிகாரப் பகிர்வுதான் இலங்கைத் தமிழர்களுக்கு அமைதியையும் நன்மைகளையும் தருமேயன்றி பிரிவினை அல்ல.

**கேள்வி:** ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னெடுத்த இறுதிப் போரில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டதும் போர்க் குற்றங்கள் நடந்ததும் இப்போது அம்பலமாகிவிட்டது. என்ன சொல்கிறீர்கள்?

**பதில்:** போர்களை ஆதரிப்பவன் அல்ல நான். முன்னரே சொன்னேன் - பிரிவினையும் துப்பாக்கிகளும்தான் தீர்வு என்ற முடிவில் பிரபாகரன் தீர்மானமாக இருப்பதை உணர்ந்த பின்தான் விடுதலைப் புலிகளைக் கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்தேன் என்று. இறுதிப் போரின்போது நடந்த மனித உரிமை மீறல்கள் மிகப்பெரிய துயரம். போர்க் குற்றங்கள் இரு தரப்பினராலுமே நடத்தப்பட்டிருக்கின்றன. நிச்சயம் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசே நடவடிக்கை எடுக்க மகிந்த ராஜபக்ஷ தயக்கமின்றிச் செயல்பட வேண்டும். அதேசமயம், இந்த விவகாரம் மட்டும் பிரதானம் இல்லை மீள்கட்டமைப்பும் உச்சபட்ச அதிகாரப் பகிர்வும் வேண்டும். அவைதான் தமிழர்களின் எதிர்கால நலனை நிர்ணயிக்கும்.

**கேள்வி:** ஒரு காலத்தில் திராவிட நாடு கோரிக்கை தமிழகத்தில் இருந்தது அந்த அளவில் இல்லாவிட்டாலும், தனித் தமிழ்நாடு கோரிக்கை இன்றும் உயிரோடு இருக்கிறது. பிராந்திய உணர்வுகள் மேலெழும் சூழலில் இன்னும் நூறாண்டுகளுக்குப் பின் தமிழகம் எப்படி இருக்கும் இந்தியா எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

**பதில்:**கற்பனைக்கு அப்பாற்பட்ட கேள்வி இது. எப்படி இருக்கும் என்பதைவிட, எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன் என்று சொல்லலாம். ஏழை - பணக்காரர் பிளவுகள் அற்ற மக்கள் நலன் பேணும் நாடாக இந்தியாவும் அதன் முன்னோடி மாநிலங்களில் ஒன்றாக தமிழகமும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன் என அவர் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார். (செ-11)

## டிப்பர்...

உயிர் இழந்துள்ளது.

இவ் விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதேவேளை டிப்பர் வாகன [illegible] பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-6)

## வலுவான நிலையில் பாகிஸ்தான்



இலங்கை அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அபுதாபியில் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில், தமது முதலாவது இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் அணி 4 விக்கட்டை இழந்த நிலையில் 327 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் உள்ளது. துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக யுனிஸ்கான் 136 ஓட்டங்களையும் மிஸ்பாகுல்கக் ஆட்டம் இழக்காமல் 105 ஓட்டங்களையும் பெற்றனர்.

முன்னதாக இலங்கை அணி தமது முதலாவது இனிங்சிற்காக சகல விக்கட்டுக்களையும் இழந்த நிலையில் 204 ஓட்டங்களை பெற்றது. இலங்கை அணி சார்பில் அஞ்சலோ மத்தியூஸ் 91 ஓட்டங்களை பெற்றார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

பாகிஸ்தான் அணி சார்பில் யுனைட் கான் ஐந்து விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

போட்டியின் மூன்றாள் நாள் ஆட்டம் இன்று தொடரவுள்ளது.

## காங்கிரஸ்...

கூட்டணியில் இணைந்து கொள்வது தொடர்பில் எவ்வித நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை. அப்படி நிபந்தனை விதிக்கும் நோக்கம் பாரதிய ஜனதாக் கட்சிக்கும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே இக்கட்சி தலைமையிலான கூட்டணியில் இணைந்து கொள்ள முடிவு செய்தோம்.

ஈழத்தமிழர்களுக்கு காங்கிரஸ் கட்சி செய்த துரோகத்தை பாரதிய ஜனதா செய்யாது என நம்புகிறோம். ஈழத்தமிழர்களுக்கு துரோகம் இழைத்த காங்கிரஸ் கட்சியை ஆட்சியில் இருந்து தூக்கி எறிவதற்காகவே இந்தக் கூட்டணியை அமைத்துள்ளோம்.

லோக்சபா தேர்தலில் மதிமுக போட்டியிடும் தொகுதிகள் குறித்து முடிவு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. மதிமுகவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயார் செய்ய 4 பேர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

மக்களின் கருத்துக்களை அறிவதற்காக நான் மேற்கொண்ட பயணத்தின் போது கிராமங்களில் மக்களிடம் நல்லதொரு வரவேற்பு இருந்ததை அவதானித்தேன். மக்களின் கவனம் மதிமுக பக்கம் திரும்பி உள்ளது. மக்களின் இந்த வர வேற்பு நம்பிக்கை அளிப்பதாக இருக்கின்றது.

சுயமரியாதை கருதி சட்டசபை தேர்தலில் அதிமுக கூட்டணியில் இருந்து விலகி தேர்தலில் போட்டியிடாமல் புறக்கணித்தோம். கொள்கைக்கு புறம்பாக மீண்டும் அத்தகையதொரு உடன்பாடு ஏற்பட வேண்டும என நானோ எனது கட்சி தொண்டர்களோ ஒரு போதும் விரும்பவில்லை என வைகோ மேலும் தெரிவித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்...

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கான அச்சுறுத்தல்களாக கொலைகள், காணாமற்போகும் சம்பவங்கள், தாக்குதல்கள், வாய் மொழி மூலம் அச்சுறுத்தி அடிபணிய வைத்தல், சித்திரவதைகள் மற்றும் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டுவரும் பொலிஸ் நடவடிக்கைகள் காணப்படுவதாக இவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய மனித வுரிமை நிலைமைகள் 80களும் மேற்பட்ட ஊடகவியலாளரகளை நாட்டைவிட்டு வெளியேற வைத்துள்ளதாகவும் இவ்வமைப்பு கோடிட்டுக் காட்டியுள்ளது.

அதேவேளை, 2013 ஆம் ஆண்டில் ஊடகத்துறை தொடர்பில் உயிராபத்துமிக்க உலகின் ஐந்து நாடுகளில் நம்பகத்தன்மை இழந்த நாடுகளாக இந்தியாவும் பாகிஸ்தானும் விளங்குவதாக இவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிககையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று மாலைதீவில் ஏற்பட்டிருந்த அரசியல் பதற்ற நிலையால் ஊடகவியலாளர்கள் தங்கள் தகவல் சேகரிப்பை மேற்கொள்ள முடியாத அளவுக்கு அவர்கள் அச்சுறுத்தப்பட்டதாகவும் கண் மூடித்தனமான தாக்குதல்களுக்கு உளளாக்கப்பட்டதாகவும் தெற்காசிய சுதந்திர ஊடக சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# மசூதி மீது தாக்கு...

திற்கு ஆறுதல் கூறினர்.

**ஆரையம்பதியிலும் தாக்குதல்**

அதேவேளை மற்றுமோர் சம்பவத்தில் மட்டக்களப்பு மாவட்டம் ஆரையம்பதி பிரதேசத்திலுள்ள சிகரம் கிராமத்தில் நேற்று புதன்கிழமை அதிகாலை காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளத்திற்குரிய உடைமைகள் குழுவொன்றினால் சேதமாக்கப்பட்டுள்ளதாக காவல் துறையில் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை பள்ளி வாசல்கள் சம்மேளத்தின்காணியை அடையாள மிட்டு அமைக்கப்பட்ட சற்று வேலியை சேதமாக்கிய இந்நபர்களினால் காணியில் அண்மையில்அமைக்கப்பட்டிருந்த தற்காலிக இருப்பிடமும் சேதமாக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் காவல்துறை சம்பவத்தின் பேரில் உள்ளூர் வாசியொருவரை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கூறுகின்றது.

இந்த பிரதேசத்தில் காணி தொடர்பாக தமிழர்களுக்கும் முஸ்லிம் களுக்குமிடையிலான நெருக்கடியன் பின்னணியிலே இந்த சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என முஸ்லிம்கள் கருதுகின்றார்கள். (செ-11)

# பட்ஜெட் தோல்வி...

தாக்குமாறு புத்தபகவான் என்றும் போதிதததில்லை.

இலங்கையில்நடைபெறும் சில சம்பவங்களால் புத்த மதம் மிலேச்சத்தனமான மதம் என சில வெளி நாட்டினர் கருதுகின்றனர் என்றார்.

இந்த ஊடக சந்திப்பில உரையாறறிய மத்திய மாகாண சபை உறுபபினர் அசாத் சாலி,

இதுவரை 20க்கும மேற்பட்ட முஸ்லிம் பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டுள்ளன. இந்த பள்ளிவாசல்களில் போதைப் பொருள் வியாபாரம் நடப்பதாக நினைத்து தாக்கு தல் நடத்தியுள்ளனர்.

2014 ஆம் ஆண்டு ஆரம்பமாகியுள்ள நிலையில், மக்கள் தமது பிள்ளைகளுக்கு பாலை பருக்க முடியாத சூழ்நிலையில் உள்ளனர்.

2013 ஆம் ஆண்டின் இறுதியில் ஹெரோயின் போதைப் பொருள் பற்றியே அதிகமாக பேசப்பட்டது என்றார். (செ-11)



CIMA கற்க விருப்பம்! செலவு மிக அதிகமாம்!
கவலையை விடுங்கள் MCS,CIMA UK இணைந்து வழங்கும்
Scholarship Totally free for CIMA-CBA 34000 Rs.
CIMA-UK schol. Totally free for Reg 16800 Rs.
Offer valid untill 5th Jan. Pay only10000Rs for 2nd level
Type CIMAFREE<NAME> & send to 772395895
அடிப்படைத்தகைமைகள் எதுவுமில்லை. எத்துறை சார்ந்தோரும் பயிலலாம்.
மாணவர்களின் உயந்த பெறுபேறுகள்.தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள்.
உங்கள் தெரிவிற்கேற்ப விரிவுரை நேரங்கள். மேலதிக விபரங்களிற்கு
MCS யாழ்பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்

BEACON
யாழ் நகர்
A/L DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் (C-6041)
06.01.2014 Mon 8.00 Am

NEW SCIENCE CENTRE
Jaffna
CHEMISTRY
திரு.அ.சேந்தன்
A/L 2016
ஆரம்பம் :
05.01.2014 (2.00 Pm)
A/L 2014, 2015 DAY CLASS
வகுப்புக்கள் நடைபெறுகின்றன
(C-6041)

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. இரு இடத்திலும் மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2016
கலை, வர்த்தக, கணித, உயிரியல், தொழில்நுட்ப பிரிவுகள்
ஆரம்பம் Jan 05 9.00Am
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

யாழ் நகரில்...

கட்டிட நிர்மாணத் துறையில் மாத வருமானம் ரூபா 150,000/= இனை உறுதி செய்யும் 18 மாத பாட நெறி
BTEC HND in
- Quantity Surveying
- Civil Engineering
Leading to BSc (Hons) From UK
வார இறுதி வகுப்புகளும் ஆரம்பம்.

Why Choose BCAS for QS & Civil Engineering ?
- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தயேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- RICS, CIQB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
- தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
- கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
- 15 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
(C-6067)
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

புத்தாண்டுப் பரிசு
எம்மால் மட்டுமே இது சாத்தியம்
5 மாதங்களில் வெற்றி பெறலாம்
(நிபந்தனைகளுடன்)
மீண்டும் புதிய வடிவத்தில், புதிய சட்ட ஆளணியினரோடு
ஆஸ்திரேலியா குடும்ப விசா
(விசா வகை 888)
55 வயதிற்குட்பட்ட குடும்பத் தலைவன் / தலைவி,
விண்ணப்பிக்கலாம். 2 வருட விசா பெற்று PR பெறும் வாய்ப்பு.
குடும்பத்தோடு குடிபெயர முத்தான வாய்ப்பு.
✦ முன்னர் வேறுவகை விசாக்களிற்கு ஆலோசனை பெற்றவர்கள்.
இலவசமாக இவ் ஆலோசனை பெறும் சந்தர்ப்பம். (நிபந்தனைகளுடன்)
கனடா, இத்தாலி, போலந்து விசா
ஆலோசனைகளிற்கு புத்தாண்டு
தினத்தன்று 20% கட்டணக்கழிவு
(C-6069)
திசைகாட்டி பிறைவேற் லிமிட்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com

DCM யாழ்.நகர்
A/L 2016
கலை, வர்த்தகம்,
தொழில்நுட்பப் பிரிவுகள்
ஆரம்பம்
ஜனவரி 05 காலை 9 மணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.